நகரத்தார் குரல்

சமூக இலக்கிய மாத இதழ்

ஏப்ரல்-2000

ஆசிரியர்
வி.என். சிதம்பரம்

திருவும்
தெள்ளிய அறிவும்



சென்னை மலர்
மருத்துவமனை
சேர்மன்
S.ராமமூர்த்தி
அவர்களுடன்
சந்திப்பு...



நகரத்தார் குரல்

சமூக இலக்கிய மாத இதழ்

குரல் 19
ஒலி 3

விக்கிரம
சித்திரை

ஏப்ரல்
2000

ஆசிரியர்
வி.என். சிதம்பரம் செட்டியார்



சென்னை அடையாறில் மருத்துவ ஆலயம்
மலர் மருத்துவமனையின் சேர்மன் மற்றும் நிர்வாக
இயக்குநராக செயலாற்றி வரும் மருத்துவ மேதை

டாக்டர் எஸ். இராமமூர்த்தி

அவர்களுடன் ஒரு சந்திப்பு...

உள்ளே ...

108–109, நேதாஜி சாலை, அறை எண். 12, மாடி
மதுரை – 625 001. தொலைபேசி: 746206

உங்கள் குரல்

சிறப்பு...

மார்ச் மாத இதழில் எங்கள் பங்காளி சுப.அ.பழ அடைக்கப்ப செட்டியார் அவர்களின் பேட்டி சிறப்பாயிருந்தது. வெளியிட்ட குரலின் தொண்டும், பணியும் தொடர ஆண்டவனை வேண்டி வணங்குகிறேன்.

- குமு. பழனியப்பசெட்டியார், நெற்குப்பை.

ஜொலிக்கிறது...

பங்குனி மாத இதழின் அட்டைப்படமும், பேட்டியும் வெகுவாக ஜொலிக்கிறது. **- சபாரெத்னம்,** சேலம்.

மாற்றம் வேண்டும்...

அடைக்கப்பசெட்டியார் பேட்டியில் பழமைக்கும் புதுமைக்கும் இடையில் மாறுதல்களையும், மாறுதல்களுக்கேற்ப நம்மவர்களும் மாறவேண்டும் என்பதையும் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

- சிவசுப்பிரமணியன், மதுரை.

நெகிழ்ந்தேன்...

கவிதையில் கசிந்தேன் என்று ஆசிரியர் வி.என்.சிடி. வருத்தப்படுவதும், மு.மேத்தாவின் கவிதையினை வெளியிட்டு வன்முறை கலாச்சாரத்தை ஆசிரியர் உள்ளம் வெறுத்து கசிந்ததைக் கண்டேன். நானும் நெகிழ்ந்தேன்.

- அரு. சொக்கலிங்கம், ஈரோடு

பாராட்டு...

பிஎல்.ஏ. சிதம்பரம் போன்றவர்கள் அரசியலில் இருந்தாலும் சொல்வதையும் அதன்படியே செய்வதையும் பண்பாடாகக் கொண்டிருக்கவேண்டும். அப்படிச் செய்தால் பாராட்டுவோம்.

- ராமநாதன், வலையபட்டி

மார்ச் நகரத்தார்குரல் கண்டேன். மகிழ்வுற்றேன். நெற்குப்பை அடைக்கப்ப செட்டியார் பேட்டி வெகு யதார்த்தமாக அமைந்திருக்கிறது. குரலுக்கு சிறப்பு தன் மனைவி மீது கொண்ட அன்பையும், ராசியானவர் என்று சொல்வதும் இல்லறத்தை உணர முடிந்தது.

- டாக்டர் என்.என்.கண்ணப்பன், மதுரை.

பிஎல்.ஏ. சிதம்பரம் பேட்டியில் வள்ளலுக்கும், கவிஞருக்கும் அஞ்சல்தலை வெளியிடவேண்டும் என்று கூறிய கோரிக்கையினை அவர் சார்ந்த இயக்கத்தின் சார்பில் இந்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

- சுப்பையா, செயலாளர், திருச்சி நகரத்தார் சங்கம்

மார்ச் இதழ் அருமை மிகவும் அருமை. எங்கள் பங்காளி அடைக்கப்பசெட்டியார் படமும் பேட்டியும் மிகமிக அற்புதம். அண்ணன் அவர்களை வாழ்த்தி வணங்குகிறேன். பேட்டியை வெளியிட்ட ஆசிரியர் பங்காளி வி.என்.சிடி. அவர்களுக்கும் மிக்க நன்றி.

- என். மோகனசுந்தரம், திருநெல்வேலி.

சமீப காலங்களில் குரலின் ஒலி ஓங்கி ஒலிப்பதுடன் ஒளி (Light) மிளிருவது மகிழ்ச்சிக்குரியதாகும். ப்ரூக்பாண்ட் அண்ணாமலையின் கட்டுரை பல நகரத்தார்களின் மூடிய கண்களைத் திறக்கும்.

- எம்.ஆர்எம். ராஜகோபால், புதுவயல்.

பெரியவர் எம்ஏசிடி பற்றி பெருமைக்குரிய நகரத்தாரில் ஆசிரியர் வழங்கிய செய்திகளை அறிந்து வியந்தேன். அவர் பற்றிய கவிதை அருமை. அடைக்கப்பசெட்டியார் பேட்டியும் சிறப்பாக இருந்தது.

- சுந்தரம், ஈரோடு.

மார்ச் இதழில் தென்கச்சி அவர்களின் வெற்றியின் ரகசியம் சிறப்பாக இருந்தது. கவிதையில் கசிந்தேன் மனதைத் தொட்டது. அடைக்கப்பசெட்டியாரின் சந்திப்பும் சிறப்புதான். மருத்துவம், லிங்கனின் சித்தி என்று பயனுள்ள தொகுப்பாக அமைந்தது.

- ஏஎன். சிதம்பரம், விராச்சிலை

ஆசிரியர் பக்கம்

வி.என். சிதம்பரம்

பெருமைக்குரிய நகரத்தார்

பெரியவர் எம்.ஏ.சிடி அவர்கள் நினைவுகள் மீண்டும் மீண்டும் வருகின்றது. என் நினைவுகளின் இன்னொரு பதிப்பு இதோ.

சென்னை சேப்பாக்கத்தில் மிகப்பெரிய விளையாட்டு மைதானம் இன்றும் இவர் பேர் சொல்கிறது ஆனால் அன்று சட்டசபை வரைக்கும் பிரச்சனை எழுப்பப்பட்டது. எப்படித் தெரியுமா...? சேப்பாக்கத்தில் அரசு இடம் ஒதுக்கிக் கொடுத்தது. ஸ்டேடியம் கட்ட முழுச்செலவினையும் எம்.ஏ சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஏற்று கட்டுமானப் பணிகள் முடிந்ததும் லண்டன் சென்று விட்டார்கள். சென்னை கிரிக்கெட் சங்கத்தினர் 'எம்.ஏ சிதம்பரம் ஸ்டேடியம்' என்று பெயரைச் சூட்டி கௌரவித்தனர் அப்போது சட்டசபையில் அரசு ஒதுக்கிக் கொடுத்த இடத்தில் ஸ்டேடியம் கட்டிவிட்டு எப்படி அவர் பெயரை வைக்கலாமென்று கேள்வி கேட்டனர் அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள் பதிலுரைக்கும்போதும் அரசுதான் கிரிக்கெட் சங்கத்திற்கு இடம் கொடுத்தது ஆனால் அரசிடம் ஒரு வார்த்தைகூட கேட்காமலேயே சிதம்பரம் பெயரை வைத்துவிட்டனர் என்றார்.

இதைக்கேள்விப்பட்ட பெரியவர் எம்ஏசிடி அவர்கள் இந்தியா திரும்பியதும் முதல்வரைச் சந்தித்து, "என் பெயரை வைத்தது எனக்கே தெரியாது. கருணாநிதி ஸ்டேடியம் என்று வைக்கவேண்டும் என்பதே என் விருப்பம்" என்று பெருந்தன்மையோடு சொன்னாராம். உடனே கலைஞர், "அரசிடம் ஒரு வார்த்தை கேட்கவில்லையே என்பதுதான் என் வருத்தம். உங்கள் பெயரைத்தவிர யார் பெயர் வைத்தாலும் அந்த ஸ்டேடியத்திற்குப் பொருந்தாது" என்று சொல்லிவிட்டாராம். என்ன சொன்னாலும் பெரியவர் எம்ஏசிடி அவர்களின் ஆதங்கம் தணியவே இல்லை. அவரின் ஆதங்கத்தை தணிக்கவும், மனம் புண்பட்டுவிடக்கூடாது என்ற காரணத்திற்காகவும், சேப்பாக்கம் சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடந்த ஒரு கிரிக்கெட் டெஸ்ட் மேட்சை தன்வேலைப்பளுவிற்கு இடையிலும் ஒருநாள் முழுவதும் இருந்து ரசித்துவிட்டுப் போனாராம் முதல்வர் கலைஞர்.

விளையாட்டுத்துறையில் மட்டுமா தடம் பதித்தார்? அவரின் எண்ணங்களும் விசாலமானவை... கல்வியிலும், தொழிலிலும் நவீன யுக்திகளைக் கொண்டு தமிழகம் தொழிற்துறையில் தடம் பதிக்கக் காரணமான சிலருண்டு என்றால் அதில் முதல்வராகத் திகழ்ந்தவர் எம்ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்கள். மத்திய, மாநில அரசுகள் தங்களின் பட்ஜெட் நாடாளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே அதைத் தயாரிக்கும் பணியில் எம்ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்களை ஆலோசிக்காமல் பட்ஜெட் தயாரிப்பதில்லை என்பதையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வளவு பொருளாதாரநுட்பமும், தொழில்நுட்பமும் நிரம்பப் பெற்ற ஓர் அறிவுஜீவி பெரியவர் எம்.ஏ.சிடி. அவர்கள்.

முயற்சியிலோ, உழைப்பினிலோ மனதில் தோன்றும் எண்ணத்திலோ ஒரு சிறுகளங்கமோ, தயக்கமோ கொள்ளக் கூடாது எனும் கொள்கையோடு வாழ்ந்து வந்தவர் அந்தக் கொள்கையை தன்னைச் சேர்ந்தவர்களும் கடைப்பிடிக்கவேண்டும்



என்ற உறுதியோடு இருந்தார்.

எவ்வளவு உறுதியோடு இருந்தாரோ அதே அளவுக்கு மென்மையான உள்ளமும் கொண்டவர். அதற்கு ஓர் உதாரணம்... தன் பேத்தியின் திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டுவிட்டது. திருமணத்துக்கு சுமார் எழுபது நாட்களுக்கு முன்னதாகவே கோட்டூர்புரத்திலுள்ள தனது அடையார் ஹவுசின் தோட்டத்தில் ரோஜாச் செடிகளைப் பதியன் போட்டார். பதியன் போடப்பட்ட செடிகளை தினந்தோறும் அவரே நேரடியாக நீர் பாய்ச்சி, பராமரிப்புப் பணிகளை செய்து அந்த ரோஜா செடிகளை வளர்த்தாராம். ரோஜா செடிகளும் தன் பேத்தியின் திருமணத்திற்கு முதல் நாளே பூத்துக்குலுங்கின. அந்த ரோஜா மலர்களைக் கொண்டே தன் பேத்தியின் திருமண அலங்காரம் செய்யப்பட்டதாம்.

அரசர் வீட்டுத்திருமணம் என்றால் சென்னையில் உள்ள பூ மார்க்கெட்டையே கொண்டு வந்து அலங்கரிக்கலாம். ஆனால் எம்ஏசிடி அவர்கள் ஒரு ரோஜா செடி 70 நாளில் பூக்கும் அது திருமணத்திற்கு முதல்நாள் பலன் கொடுக்கும் என்ற திட்டமிடப்பட்ட செயலும், தன் பேத்தியின் மீது அவர் கொண்ட பாசத்தின் வெளிப்பாட்டையும் கண்டு வியந்து போனேன். தன் வாழ்க்கையை உலகத்தை, கலையை, இசையை, நண்பர்களை தன்னுடைய நிறுவனங்களை, நேசிக்க நேசிக்க அவரின் அந்த நேசிக்கும் பண்பு உயர்ந்து உயர்ந்து அவரைப் பண்பட்ட நெஞ்சராக, பற்றற்றத் தன்மை கொண்ட உள்ளத்தினராக விளங்க வைத்தது என்பதை அறிந்து பெருமிதம் கொண்டேன்.

1955-ல் சென்னை மாநகரின் வணக்கத்திற்குரிய மேயராகப் பொறுப்பேற்று மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிய பெருமைக்குரியவர் எம்ஏசிடி என்பதை மாநகராட்சியின் வரலாறு இன்னும் இவர் பேர் சொல்லும்.

கிரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களிலும் தமிழிசை வளர்ச்சிக்கும் மன்றங்களையும், மைதானங்களையும் உருவாக்கி, இசைக்கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கிக் களம் அமைத்து கொடுத்த கர்த்தர். உலக தரத்திற்கு இணையாக ஸ்பிக் உர நிறுவனத்தை உருவாக்கிய தொழிற்சிற்பி என்று அனைத்து அரசியல் தலைவர்களாலும் பாராட்டப்பட்ட பெருமைக்குரிய நகரத்தார் பெரியவர் எம்ஏசிடி.

வாழ்ந்து கொண்டிருந்த ஒரு வரலாற்றை காலதேவன் கவர்ந்து சென்றான். ஆம் தைப்பூசத்திருநாளில் தைப்பூசஜோதியாய் ஒளிர்ந்தார். இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்று ஹிரண்யனுக்குச் சொன்னான் பிரகலாதன்.

ஆனால் எம்ஏசிடி தேசத்தின் தொழில்நுட்பத்திலும், பொருளாதாரத்திலும், லட்சக்கணக்கான தொழிலாளர்களின் இல்லங்களிலும், நெஞ்சங்களிலும் என்றும் நிலைத்திருப்பார் என்பது மட்டும் நிச்சயம்...


Enjoy
Coca-Cola
Coke
Diet
Fanta
Sprite
Limca
Hindustan Coca-Cola Bottling South West Private Limited
Chennai

சிரிப்போம் ...! சிந்திப்பதற்காக ...!

முனைவர். கு. ஞானசம்பந்தன்

9

நகைச்சுவையைப் புத்தகத்தில் துணுக்குகளாகப் படிப்பதற்கும், அவற்றை நேரே அனுபவித்துச் சிரிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

என்னைப் பொறுத்தவரை, நேரே சந்திக்கும் அனுபவங்கள் முதலில் சாதாரணமாகத் தொடங்கிப் பின்னர் நகைச்சுவையாக மாறும் பாருங்கள்... அடேங்கப்பா!

இந்த மாதம் சிவராத்திரி விழாவிற்குப் பேச திருமயம் வழியாக ராயபுரத்தைத் தாண்டிச் சென்றுக் கொண்டிருக்கிறோம். அப்போதே இரவு 10-30 மணியாகிவிட்டது. கார் ஓட்டுநருக்கு மதுரை மாசிவீதிகளைத் தவிர வேறு வீதிகளில் ஓட்டிப் பழக்கம் கிடையாது. எங்களுக்கோ பாதை தெரியாது. எங்களை அழைத்துச் சென்ற தாலாட்டுக் கவிஞர் திரு. குமரப்பன் அவர்கள் விடாது ஒவ்வொரு இடத்திலும் இறங்கி எந்தப்பக்கம் போவது? எப்படிப் போவது? என்று விசாரித்துக் கொண்டு வருகிறார்.

அவர் விசாரிக்கிற ஆட்கள் பெரும்பாலும் வெளியூர்க்காரர்களாகவே இருக்கிறார்கள். அல்லது மிக அதிகமாகக் குடித்துவிட்டு அவரிடமே திருப்பி விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

உள்ளூர்க்காரர்கள் எல்லாம் வெளியூருக்குச் சாமி கும்பிடப் போய்விட, வெளியூர்க்காரர்கள் எல்லாம் உள்ளூரில் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

கடைசியில் இனிப் பொறுக்க முடியாது எனக் கோபத்தோடு நான் இறங்கி கடியாபட்டிப் பாலத்தில் உட்கார்ந்திருந்த ஒரு நபரிடம் போக வேண்டிய இடத்தைக் கேட்டேன்.

அவர் போட்டிருந்த 'தண்ணி' ஊரையே அடித்துக் கொண்டு போய்விடும் போல இருந்தது. ஆனாலும் அவர் மிகுந்த தாயன்போடு விளக்கிச் சொல்லத் தொடங்கினார்.

"நீதான் டிரைவரா?" என்னைக் கேட்டார்.

"இல்லை- நான் வாத்தியார் - பேச்சாளன்"

"அப்ப ஏன் இந்நேரத்தில அலையுரே? ஏதாவது வேணுமா?" சைகையில கேட்டார்.

"வழி தெரியல வழிதான் வேணும்"

"அத முதல்ல சொன்னா என்ன? இதோ பாரு இதே ரோட்ல ஃபுல்லாப் போனியானா... ரெண்டு ரோடு வரும் அதுல ஆஃப்ல கட்ட பண்ணினா ஆலமரம் வரும். அதுல குவாட்டர் திரும்பினா... ரோடு தண்ணி பட்டப்பாடு தான் - புரிஞ்சுதா?"

எனக்கு இப்போது போதை ஏறினமாதிரி ஆகி விட்டது. "அய்யா இவ்வளவு விளக்கமாச் சொன்னீங்களே உங்க ஊரு எது?"

"பெருங்குடி" - தடாலென சத்தம்.

நாங்கள் கிளம்பி அதேபோலே சென்றோம். அவர் சொன்ன வழி சரியாகத்தான் இருந்தது. நான் பேச்சைத் தொடங்கும்போது இதைச் சொல்லித்தான் தொடங்கினேன். அனைவரும் கேட்டு மகிழ்ந்து சிரித்தார்கள்.

குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் சண்டை வருவது இயல்பு. சிலவீடுகளில் கணவனின் கை

ஓங்கியிருக்கும் சிலவீடுகளில் மனைவி கைதான் ஓங்கியிருக்கும்.

ஒரு வீட்டில் அடிதடி சத்தம். கதவு பூட்டியிருந்ததால் யாரை யார் அடிக்கிறார்கள் என்று தெரியாமல் தெருவில் அனைவரும் வெளியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று கணவனின் சத்தம் கேட்டது "அடிக்காதே... அடிக்காதே... நேத்து அடிச்ச அதே இடத்தில அடிக்காதே" என்று கத்திக்கொண்டே கதவைத் திறந்து கொண்டு வெளியில் ஓடினான். அவன் மனைவியாகிய அந்தக் கற்புக்கரசியும் விடாது துரத்திச் சென்றாள்.

நம் தமிழ் மூதாட்டி ஔவையும் இதே காட்சியைத்தான் பாடலாகப் பாடி வைத்துள்ளார்.

ஊர் ஊராகச் சென்று அரசர்களையும், கொடை வள்ளல்களையும் பாடிவருதல் அக்காலப் புலவர்களின் இயல்பு. 'ஔவையார்' என்ற பெயரில் பல தமிழ்ப் பெண்பாற்புலவர்கள் தமிழ்நாட்டில் இருந்திக்கிறார்கள்.

சங்கக்காலத்தில் அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அதியமான் என்ற அரசனிடத்தில் நெல்லிக்கனி பெற்ற ஔவை.

புராண காலத்தில் மாடு மேய்க்கும் சிறுவனாக வந்த முருகப்பெருமானிடத்தில் நாவற்கனி பெற்ற ஔவை.

பிற்காலத்தில் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர்கள் காலத்தில் வாழ்ந்த ஔவை. இவர்களில் கம்பர் காலத்து ஔவையாரே பிற்காலத்தவர்.

'விநாயகர் அகவல்' பாடியவர் இவராக இருக்கலாம். இந்த ஔவை ஒருமுறை ஒரு கிராமத்திற்கு வந்தார். இவரது பாடலைக் கேட்ட பலருள், ஒருவன் ஔவையிடத்தே நெருங்கி வந்து வணங்கினான் 'தாயே! உங்கள் தமிழ்ப்பாடல் மிக இனிமை, எளிமை, அருமை... எனது வீட்டில் ஒருவேளை உணவு அருந்தவேண்டும்' என அன்போடு வேண்டினான்.

ஔவையும் மகிழ்ந்து அவனோடு சென்றார். அவனது வீட்டை நெருங்கியதும், அவன் ஔவையாரைப் பார்த்து, "தாயே! இங்கேயே இருங்கள்" என்று பயத்தோடு சொல்லிவிட்டு வீட்டிற்குச் சென்றான்.

அவன் வீட்டு வாசற்படியில் அவன் மனைவி தலையை விரித்துப் போட்டபடி அமர்ந்திருந்தாள்.

இவன் அவளருகே சென்றான் அன்பாகப் பேசினான். விரித்துப் போட்ட தலையில் சற்று நேரம் பேன் பார்த்தான். ஈறு குத்தினான். பிறகு உரையாடத் தொடங்கினான்.

"நீ இன்றைக்கு மிக அழகாக இருக்கிறாய்" என்றான்.

"ம்" - இது அவள்.

"உன் தலையில் ஈறும் பேனும்கூட அழகாக இருக்கின்றன."

"சொல்லு"

"நம் வீட்டிற்கு விருந்து ஒன்று" - அவன் சொல்லி முடிப்பதற்குள், சடாரென்று எழுந்த மனைவி வீட்டிற்குள்ளே சென்று பழைய முறம் (அரிசி புடைப்பது) ஒன்றை எடுத்துவந்து அவனை அடிக்கத் தொடங்க... அவன் அலறியபடி ஓடிவந்து ஔவையைத் தாண்டி ஓட, அவன் மனைவியும் விடாது துரத்தியபடி ஓடினாள்.

இதனை வேடிக்கை பார்த்த ஔவையார்,

'இருந்து முகம்திருத்தி ஈறோடு பேன் வாங்கி விருந்தொன்று வந்ததென்று விளம்ப - வருந்திமிக ஆடினாள் பாடினாள் பாடிப் பழமுறத்தால் சாடினாள் ஓடோடத்தான்' என, அக்காட்சியைப் பாடலாக்கினார்.

சென்ற வாரம் என் நண்பனுக்குத் திருமணப் பத்திரிகை கொடுக்க வந்த ஒருவன் கட்டாயம் திருமணத்திற்கு வரவேண்டும் என்றான் உடனே என் நண்பனும், "நீ எனக்கு எவ்வளவு உதவிகள் செய்திருக்க... உனக்கு ஒரு துன்பம்னா வராம இருப்பேனா? கட்டாயம் வருகிறேன்" என்றான்.

- தொடரும்

காரைக்குடியில் கம்பன் திருநாள்...



கவிச்சக்ரவர்த்தி கம்பனின் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம் என்ற முழக்கத்தோடு 1938-ல் கம்பனடிப்பொடி சா. கணேசனாரால் தொடங்கப்பெற்ற கம்பன் கழகத்தின் சார்பிலும், கம்பன் அறநிலை சார்பிலும் கம்பன் திருநாள் 18-3-2000 அன்று மாலை மிகச்சரியாக ஆறுமணிக்கு கம்பன் வாழ்க! கன்னித்தமிழ் வாழ்க! என்ற வாழ்த்துக்களோடு துவங்கியது. கம்பன் மணிமண்டபம் திருநாளுக்கான அலங்காரங்களோடு கலை எழிலுடன் காட்சியளித்தது.

பேராசிரியர் சோ. சத்தியசீலன் தலைமையேற்றார்.

திருநாள் மங்கல நிகழ்வாகத் தொடங்கியது. திருமதி. லெட்சுமி கிருஷ்ணமூர்த்தி தன் சங்கீதக்குரலில் இறைவணக்கம் இசைத்தார். திருமதி. ராதா ஜானகிராமனின் குயிலிசையில் வாழ்த்துப்பா இசைக்க மாணவிகள் மலர் எடுத்து கம்பனின் திருவுருவப்படத்திற்கு மலர் வணக்கம் செலுத்தினர் கம்பன் கழகத்தலைவர் மு.மெ. முத்து ராமன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்

தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் தொடக்கவுரை ஆற்றிப் பேசுகையில்...

ராமர்காதை எழுதிய கம்பன் தான் ஒரு வைணவபிரிவைச் சேர்ந்தவன் என்றாலும் தான் எந்தப்பிரிவைச் சேர்ந்தவன் என்பதைக் கூறாமலேயே ஒரு பொதுமைச்சமயம் படைத்த காப்பியநாயகன் கம்பன் அன்றைக்குத் தோன்றிய சைவ வைணவ மதப்பிரச்சனைக்கு அன்றே முற்றுப்புள்ளி வைத்தான்.

ராமாயணம் என்பது நாடோடிப்பாடலாக இருந்திருக்கவேண்டும் என வரலாற்றுச் செய்தியில் அறியமுடிகிறது. வால்மீகி ராமாயணத்தை எழுதியிருந்தாலும் அது வால்மீகி ராமாயணம் என்ற பெருமையைப் பெறவில்லை தான் படைத்த ஒரு

காவியத்தையே தன் பெயரோடு இணைத்து அந்த இலக்கியத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறான் கம்பன் என்றால் அது தமிழுக்கும். தமிழ்த்தாய்க்கும் பெருமைதானே. ஒரு தேசத்தில் மன்னன் என்பவன் உயிரைப் போன்றவன். மக்கள் எல்லாம் அந்த உயிரைச் சார்ந்த உடலைப் போன்றவர்கள் என்ற முடியாட்சித் தத்துவத்தை மாற்றி மக்களெல்லாம் உயிரைப் போன்றவர்கள் மன்னன்தான் அந்த உயிரைச்சார்ந்த உடல் என்று கம்பீரமாகச் சொல்லி குடியாட்சித் தத்துவத்தை அன்றே சொன்ன ஒரு தீர்க்கதரிசி கவிச்சக்கரவர்த்தி கம்பன். செட்டிநாட்டு சீமை கம்பனடிப்பொடி கணேசனார் அவர்கள் கம்பனுக்கு ஒரு கழகத்தினைத் தொடங்கி ஆண்டுதோறும் திருநாளாகக் கொண்டாடுகின்ற இந்த சபையில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததைப் பெருமையாக எண்ணுகிறேன் என்று சொன்னதும் கரவொலிகளால் அரங்கம் குலுங்கியது.

தலைமையுரையாற்றிய சோ. சத்தியசீலன்...

காரைக்குடி என்றால் எங்களைப் போன்றவர்களுக்கு நினைவுக்கு வருபவர் கம்பனடிப்பொடி என்று தன்னை அழைத்துக் கொண்ட சா. கணேசனார் அவர்கள்தான். அந்த ராமகாதையை அரங்கேற்றி கவிச்சக்ரவர்த்தி என போற்றப்பட்ட கம்பனின்பால் ஈர்க்கப்பட்ட பெருமகனார் சா.க. அவர்கள் நிறுவிய இந்த கம்பன் கழகம் தமிழ் வளர்க்கும் பணியினை சிறப்புற ஆற்றி வருகிறது.

மொழியென்பது எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு கருவியென சொல்லப்பட்ட காலத்தில் மொழியென்பது அதன் பண்பாட்டை கலாச்சாரத்தைப் பதிவு செய்தும். வெளிப்படுத்துவதுமான மிகப்பெரிய ஆயுதம் என்பதை கம்பன் கையாண்ட தமிழ்மொழியின் பதிவுகளில் இன்று காண முடிகிறது.

ராமன் என்பவன் யார்.? அவன் அவதாரமா.? என்பது அவனைப் பெற்ற தசதரனுக்கு தெரியாது அவன் குருகுல ஆசானுக்கும் தெரியாது ஆனால் ராமன் என்பவன் நன்மை தீமைகளை உலகுக்கு உணர்த்தவும் தனிமனித நல்லொழுக்கத்தை உலகுக்குப் பரப்ப வந்த ஓர் இன்ற அவதாரம் என்பதை வாலியின் மூலம் உணர்த்தி ஒரு புது யுக்தியைக் கையாண்டவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன் என்றார்.

"கம்பனும் சமயமும்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றிய சாலமன் பாப்பையா அவர்கள்...

சமயத்தைப் பற்றிச் சொல்லும்போது ஒரு குழந்தை பிறந்து விட்டால் அந்தக் குழந்தையின் பெற்றோர் ஏதாவதொரு பெயர் சூட்டுகின்றனர் அந்தப் பெயரைப் பார்த்தாலே தெரிந்துவிடும் இது இந்த சமயத்தைச் சேர்ந்த குழந்தை என்பது... ஆக பெயர் என்பது பெற்றோர் அளித்த கொடை என்றால் சமயமும் பெற்றோர் கொடுத்த கொடை தானே.. அதுசரி கம்பன் என்பவன் என்ன சமயம்...? என்று ஆராய்ந்து பார்த்தால் என்னைப் பொறுத்தமட்டில் என்னன்னா ஒரு மிகச்சிறந்த வைணவ காவியம் படைத்த கம்பன் வைணவ சமயத்தவனாகத்தான் இருக்கவேண்டும் என்று உறுதியாகக் கருதுகிறேன். அதுலவந்து சந்தேகத்திற்கு இடமிருக்கிற மாதிரி எனக்குத் தெரியல... இல்லாம இருந்தாலும் இருக்கட்டும் பரவாயில்ல ஏன்னா கம்பன் இந்த சமயத்தைச் சேர்ந்தவன்தான் என யூகிக்க முடிகிறதே தவிர ஓங்கிச் சொல்ல சான்றுகள் இல்லையே... கம்பன் எந்த சமயம் என்ற ஆராய்ச்சியில் நுழைய நான் விரும்பவில்லை ஒவ்வொரு காப்பியங்களிலும் ஏதாவதொரு சமயம் அடிநாதமாக இருக்கிறதே.

மணிமேகலையை எடுத்துக் கொண்டால். அந்தக் காப்பியத்தின் அடிநாதம் பௌத்த மதத்தினை வற்புறுத்துகிறது

சிலப்பதிகாரம் எனும் காவியத்தைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால் வைணவமோ சைவமோ பௌத்தமோ என்று மதங்களைக் கடந்து ஒரு பொதுமைச் சமயச்சிந்தனைக்கு பிள்ளையார்சுழி போட்டதென்றால் அது சிலப்பதிகாரம் தான்..

சீவக சிந்தாமணி இலக்கியத்தைப் பாருங்கள்... அதில் முழுக்க முழுக்க அடிநாதமாக இழையோடுவது சமணம்தான். சமணத்தைத்தானே அது வலியுறுத்துகிறது...

அடுத்து பெரியபுராணத்திற்குப் போவோம். அங்கே முழுக்க முழுக்க சைவம்தான் வேறு சமயங்களுக்கு அங்கு வேலையில்லை.

ஆனால் கம்பன் மட்டும் தன்னந்தனியனாக நின்றுகொண்டு சமயத்தின் ஒரு புதிய திசையை, ஒரு புதிய பாதையை உருவாக்குவதென்றால் இதற்கு ஏதேனும் காரணம் இருந்திருக்க வேண்டும். அவற்றை எல்லாம் ஆராயும்போது சோழன் அபயன் காலத்தில் கம்பன் வாழ்ந்திருக்கிறான் என்பதை கம்பனின் ராமாயணத்திலிருந்து விளங்க முடிகிறது. அவன் காலத்தில் அங்கே என்ன நடந்தது... சோழப் பேரரசு மெல்ல மெல்ல அதன் சக்தியை இழக்க ஆரம்பித்து விட்டது சோழப்பேரரசின் இறங்குமுகம் தெரிய ஆரம்பித்து விட்டது. உடனே அந்த நேரத்தில் குறுநில மன்னர்களின் ஆதிக்கம் வளரத் தொடங்கியது சங்ககாலத்திலிருந்து வரிசையாகப் பார்த்தால் . என்னன்ன சமயங்கள் இருந்தன.. என்றால் பௌத்தமும்... சமணமும்... அதன்பிறகு சைவமும் வைணவமும் போட்டி போட்டுக் கொண்டு வளரத்தொடங்கின பௌத்தமும். சமணமும் வலுவிழந்த காலத்தில் சைவமும் வைணவமும் மேலோங்கத்தொடங்கியது இன்னொரு விந்தை என்னவென்றால் அரசு மதமாக சைவம் அங்கிகாரம் பெற்றது தமிழ்நாட்டில் அரசு மதமாக மாறிவிட்டால் அரசு சொல்வதைத்தான் அரசாங்கம் செய்ய வேண்டும் என்ற ஒரு நெருக்கடி வந்தது

இந்த காலத்தில் இன்னொரு சமயத்தைக் கொண்டு வடநாட்டிலிருந்து பதினோராம் நூற்றாண்டில் நுழைந்தாள் 'கோசால மாஸ்கரிபுத்ரா' என்பவள் 'ஆஸிவகம்' எனும் ஒரு சமயத்தைக் கொண்டு வந்தாள். இந்த மதத்தில் வணிகர்களும், பெரும் தனவான்களும் இணையத்தொடங்கும் போது சைவத்திற்கு ஒரு நெருக்கடி வந்தது. அப்போது சோழப்பேரரசு ஒரு வரியைப் போட்டது சைவத்தையோ. வைணவத்தையோ தவிர வேற்று மதமான ஆஸிவகத்தைத் தழுவுபவர்கள் அரசுக்கு வரி கொடுக்க வேண்டும் என்ற ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அதே 11ம் நூற்றாண்டில் 'துருக்கி'யிலிருந்து துருக்கியர்கள் முஸ்லீம் தேசம் நுழையத்தொடங்கியது பற்றி கம்பன் பாடுகிறார் "துருக்கர் தரவந்த பன்னூறு வயப்பரிகள்' என்பதை அறியமுடிகிறது. கபாலிகர்கள் எனும் தீவிரவாதிகள் மதங்களில் பெயராகப் சோழப்பேரரசுக்கு நெருக்கடி தருகிறார்கள் என்பதை கம்பனின் கவிதையில் அறிய முடிகிறது. அந்த நெருக்கடிகள் பற்றியெல்லாம் ராமகாதையின் பாத்திரங்கள் மூலமாக தன் கருத்தை கம்பன் ஒவ்வொரு இடத்திலும் சொல்லி வருகிறான். சமய மோதல்களின் நெருக்கடியில் சிக்கியதன் காரணமாக கம்பனின் மனத்தில் ஒரு வேதனை இருந்திருக்கிறது.

இறைவனைப்பற்றியும் சமயத்தைப் பற்றியும் கம்பன் கண்ட உணர்வு ஒரே வரியாய் சொல்கிறார் " **இவர்க்கு இது என்று எண்ணலானதோர் மூலமில்லாமை"** ஆதி என்று ஒன்றிருக்க. அதற்கு முன்னே ஒன்று இருக்கவேண்டுமல்லவா .. அவனுக்கு மூலமில்லை அவன் தான் இறைவன் என்று ஆணித்தரமாகச் சொல்கிறான் ஒரு உருவமும் இறைவனுக்கு கிடையாது என்பதை கம்பன் சொல்கிறான்.

"காண்பார்க்கும் காணப்படுவோர்க்கும் கண்ணாகி

பூம்பாய் போல் நிற்றியால் யாதெங்கும் பூணாதாய்
மாண்பால் உலகை வயிற்றொழித்து வான்புதியால்
ஆண்பாலோ, பெண்பாலோ, அப்பாலோ எப்பாலோ!"

என்ற கம்பன், "இறையே உன்வடிவமென்ன நீ ஆணா? பெண்ணா? என்ன உன் வடிவம்" என்று கேட்கிறான் என்றால்... இறைவன் என்பவன் ஒரு சமயத்திற்குச் சொந்தமானவனல்ல என்ற முடிவுக்கு வருகிறான். அவன் சிறகுகளை தூக்கிப் பறந்து பாக்கிறான் எந்த சமயத்தையும் அவன் தழுவாது ஒரு புதிய சமயத்தை படைத்திருக்கிறான் என்றால் கம்பன் சொல்கின்ற சமயம் பொதுமைச்சமயம் தான் என்று கூறி அமைகிறேன் என்று தமிழறிஞர் சாலமன் பாப்பையா பேசி முடித்தவுடன் புஷ்பவனம் குப்புசாமி - அனிதா குப்புசாமி குழுவினரின் கிராமியப்பாடலிசை நடை பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக ''கம்பனைக்கற்றால்'' எனும் பொதுத்தலைப்பைக் கவிஞர் மு. மேத்தா தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. எட்டுக்கவிஞர்கள் தங்கள் கவிதைகளைப் பாடினார்கள். இரவு திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அன்பின் அபிநயங்கள் வழங்கிய இசை நடன நாடகம் நடைபெற்றது.

மூன்றாம் நாள் சோ. சத்தியசீலன் தலைமையில் ''உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் முப்பால் பெரிதும் விளக்கம் பெறுவது" "இராமனிடமே" "வாலியிடமே" "இராவணனிடமே" என்று தமிழ்ப்புலவர்கள் வாதிட்டனர். நிறைவில் "வாலியிடமே" எனும் தீர்ப்பை நடுவர் வழங்கினார்.

நான்காம் நாள் நிகழ்ச்சியில் தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையில் சொல்லரங்கம் நடைபெற்றது. கம்ப அறிநிலை ச. கம்பராமன் நன்றி கூறினார். நான்குநாள் விழாவிற்கான ஏற்பாடுகளை கம்பன் அறநிலைத் தலைவர் வெங்கா, கம்பன் கழகத்தலைவர் மு.மெ. முத்துராமன், கம்பன் அறநிலை துணைத் தலைவரும் நமது ஆசிரியருமான வி.என்.சிதம்பரம், துணைத்தலைவரும் பொருளாளருமான சா.நா. நாராயணன் செட்டியார், அறங்காவலரும் கம்பன கழக செயலாளருமான நா. மெய்யப்பன், கம்பன் அறநிலை அறங்காவலர்கள் அ. திருநாவுக்கரசு, ச. கம்பராமன், ஆர்எம். எஸ்பி. ராமநாதன், பிஆர். சொக்கலிங்கம், பாரிஸ்டர் வி. அருண், எஸ். பெரியண்ணன், பேராசிரியர் கே. முருகசாமி ஆகியோருடன் கம்பன் அறநிலை மேலாளர் ஸ்ரீதர் ஆகியோர் கம்பன் திருநாளை தமிழின் திருநாளாக கொண்டாடி தமிழ்த்தாய்க்கு சிறப்புச் சேர்த்தனர்.

தொகுப்பு: **நாகேஸ்வரன்**

ரிஷிமூலம்...



பகவான் ரமண மகரிஷியின் மூலம் தெரியுமா...?

அவரின் சொந்த ஊர் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சுழி என்பதாகும். சுந்தரம் ஐயருக்கும், அழகம்மாளுக்கும் 30-12-1879 அன்று மகனாக அவதரித்தார் பகவான் ரமண மகரிஷி. மதுரை அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப்பள்ளியில் மெட்ரிக்குலேஷன் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அப்போதே அவரின் மனது ஞானமார்க்கத்தை தேடத் தொடங்கியது. மதுரை சொக்கப்பநாயக்கர் தெருவில் கதவு இலக்கம் பதினொன்று எண்ணுள்ள இல்லத்தில் 17-07-1896 ல் ஞானம் பெற்றார்.


Over
80
years
In the service
of the customer
KVB
Since 1916
THE KARUR VYSYA BANK LTD.
Regd. & Central Office: KARUR - 639 002.
The Bank that builds confidence.
A.D.Navaneethan
Chairman

௯ நகரத்தார் வாழ்வும் வாக்கும்

- - - சொ.சொ.மீ. சுந்தரம் - - -

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், கல்லூரி வளர்ச்சிக்குழுத் தலைவரும், சென்னை கோட்டையில் நிகழும் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார்கள். காலை ஏழு மணிக்குப் பாண்டியன் விரைவு வண்டி மூலம் சென்னை சென்று வழக்கமாகத் தங்கும் விடுதிக்குச் சென்றார்கள். அந்த விடுதியில் எப்போது வந்தாலும் மதியம் 12-00 மணியிலிருந்துதான் நாளைக் கணக்கிடுவார்கள். இவர்கள் இருவரும் காலை 7 மணிக்கு அறை எடுத்தால் அன்று பகல் 12 மணி வரை ஒருநாள் வாடகையும் மறுநாளைக்கு ஒருநாள் வாடகையும் செலுத்தவேண்டும். அன்று மாலையில்தான் இவர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் நடைபெறும். "பரவாயில்லை இரண்டுநாள் வாடகை கொடுத்து விடலாம்" என்று வளர்ச்சிக்குழுத் தலைவர் கூறுகிறார். துணைவேந்தரோ, "நம் சாமான்களை வரவேற்பறையில் வைத்துவிட்டு, எங்காவது நடந்து போய்விட்டு 12-00 மணிக்கு வந்து அறை எடுத்துக்கொள்வோம். ஒருநாள் வாடகையோடு போய்விடும். பல்கலைக்கழகப் பணத்தை வீணாக்கக் கூடாது" என்றுகூறி அப்படியே செய்தும் காட்டினார். இந்த இருவரில் வளர்ச்சிக்குழுத் தலைவர் பேராசிரியர் தி.அ. சொக்கலிங்கம் அவர்கள் துணைவேந்தர், மூதறிஞர் என்றும் செம்மல் என்றும் தமிழ்க்காந்தி என்றும் தமிழ் இமயம் என்றும் போற்றப்பட்ட வ.சுப.மாணிக்கம் அவர்கள். பொதுப்பணம் என்றால் புகுந்து விளையாடும் இந்தக் காலத்தில் வீட்டுச்சிக்கனம் போலப் பல்கலைக்கழகத்திலும் சிக்கனம் செய்து, முன்னோர் வைத்த பொருளைச் செலவழிக்காமல், தாமே பொருளீட்டிச் செலவு செய்து, பின்வருவோருக்கும் உதவியாக வைப்புநிதியும் வைத்துச் சென்று நகரத்தார் பெருமையை நிலைநாட்டிய பேரறிஞராகத் திகழ்ந்தார் மாணிக்கனார்.

வட்டிக்கடையில் பணியாற்றிய வ.சுப. மாணிக்கனாரிடம், கடையில் இருந்து கொண்டே இல்லையெனச் சொல்லுமாறு பணித்தார் முதலாளி. பொய் சொல்ல விரும்பாத மாணிக்கனார் மறுத்தார். வாய்மை யறத்தைப் பின்பற்றிய மாணிக்கனாருக்கு வட்டிக்கடை வேலை போயிற்று. தமிழன்னை தடுத்தாட்கொண்டு துணைவேந்தர் ஆக்கினாள். பொய்யாநாவில் கபிலரும் சத்தியசோதனைக் காந்தியடிகளும் இந்த மாணிக்கத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். நகரத்தார்கள் பொய்கூற மாட்டார்கள். வாக்குத் தவற மாட்டார்கள். எளிமையோடு வாழ்ந்து உயர்ந்தவற்றைச் சாதிப்பார்கள் என்று உலகம் புகழுமாறு மாணிக்கனார் தனக்கும் தன் இனத்துக்கும் பெருமை சேர்த்தார். குறுகிய இனப்பற்றுக் கொள்ளாமல் விரிந்த தமிழ்க்காதல் கொண்ட மாணிக்கனார் நகரத்தார் மரபுக்கு மட்டுமின்றித் தமிழ் கூறும் நல்லுலகுக்கு இமயமாக விளங்கினார்.

"தாய்மொழியைப் பாராட்டி வீழ்ந்த நாடும் இல்லை.. தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை" என்பது காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்த ஆ. முத்துசிவன் அவர்களின் வாக்கு. இதைத் தன் வாழ்வின் நோக்கமாகக்கொண்டு தான் வாழும் காலமெல்லாம் தமிழ் வாழும் காலமாகச் செய்தவர் மாணிக்கனார்.

நான் அழகப்பா கல்லூரியில் முன்னிலை வகுப்புப் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் (1959) கல்லூரி மாணவர்களுக்கு ஒரு கவிதைப் போட்டி வைக்கப்பட்டது. ஒரே தலைப்பில் மூன்று மணி நேரத்தில் ஒரே யாப்பில் மரபுக்கவிதை எழுதவேண்டும்.

"எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு" என்று தலைப்புத் தரப்பட்டது. பேராசிரியர் கவிஞர் தேசிகன் அவர்கள் கவிதைகளை ஆய்வு செய்து பரிசு பெறும் தகுதியுடையவை என்று இரண்டு கவிதைகளை எடுத்துச்சென்று. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த மாணிக்கனாரிடம் சேர்ப்பித்தார்கள். "இந்தக் கவிதைகள் இரண்டும் தரமானவை. இதை எழுதியவர்களில் ஒருவர் தமிழ் முதுகலை (எம்.ஏ.) முதலாண்டு மாணவர். மற்றொருவர் முன்னிலை வகுப்பு மாணவர். நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் பரிசு கொடுங்கள்" என்று தேசிகன் அவர்கள் கூறினார்கள். மாணிக்கனார். "தமிழ் முதுகலை மாணவருக்குப் பரிசு கொடுங்கள். முன்னிலை வகுப்பு மாணவரை என்னைப் பார்க்கச் சொல்லுங்கள்" என்று பணித்தார். அந்த முன்னிலை வகுப்பு மாணவர் பேராசிரியரைப் பார்த்தார்.

மாணிக்கனார் அந்த மாணவரிடம். "உன் கவிதை நன்றாக இருக்கிறது" என்று தேசிகன் கூறினார். "உனக்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது. நீ கலைக்கழகத்தில் இரண்டு ரூபாய் உறுப்பினர் கட்டணம் கட்டிச் சேர்ந்து கொள்" என்று வழிகாட்டினார். அந்த முன்னிலை வகுப்பு மாணவரும் அடுத்தாண்டிலிருந்து அவர் தம்பியும் கலைக்கழகத்தில் சேர்ந்தார்கள். இருவரையும் "பகல் நேர உணவு இடைவேளையில் என் அறைக்கு வந்து என்னைச் சந்திக்க வேண்டும்" என்று பணித்தார் மாணிக்கனார். வணிகவியலும் கணிதவியலும் படித்த அந்த மாணவர்கள் அவருடைய தமிழ்க் கடைக்கண் பார்வைக்குப் பாத்திரமானார்கள். திருவாசகம். நாலடியார். நளவெண்பா ஆகிய பேரிலக்கியங்களையும் பாஞ்சாலி சபதம். ஆத்திசூடி முதலிய சிற்றிலக்கியங்களையும் படித்து மாணிக்கனாரிடம் பரிசும் பெற்றார்கள். அந்த வணிகவியல் மாணவர் இக்கட்டுரை ஆசிரியரான நான் (சொ.சொ.மீ). என் தம்பி இப்பொழுது இந்திய ஆட்சிப்பணியில் (ஐ.ஏ.எஸ்.) டெல்லியில் இருக்கும் திட்டக்குழுச்செயலர் மீனாட்சி சுந்தரம் அவர்கள்.

கலைக்கழகத்தில் மாணிக்கனார் ஐம்பது தகுதியுள்ள மாணவர்களைச் சேர்ப்பார். கவிதைப்போட்டி. கட்டுரைப்போட்டி. பேரிலக்கியப்போட்டி. சிற்றிலக்கியப்போட்டி. அரைமணிச் சொற்பொழிவுப் போட்டி என்று போட்டிகள் வைத்து ஆரவாரமின்றி எல்லாப் பணத்தையும் பரிசுப்புத்தகங்களாகவே தந்து பல மாணவர்களைத் தமிழ்ப்பற்றும் பயிற்சியும் உள்ளவர்களாக ஆக்கிய பெருமை மாணிக்கனாரையே சேரும்.

எனக்கும் என் தம்பிக்கும் ஒரே பெயர். சென்னை மாணவர் மன்றம் நடத்திய கவிதைப்போட்டியில் எனக்கு முதற்பரிசும் கட்டுரைப் போட்டியில் தம்பிக்கு முதற்பரிசும் வந்தன. நாங்கள் படித்த வகுப்பை வைத்துத்தான் வேறுபாடு காணவேண்டும். பரிசு அறிவிப்பில் வகுப்பை மாற்றி எழுதி விட்டார்கள். மாணிக்கனார் அவர்கள் "பெயர் வைப்பது வேறுபாடு தெரியத்தானே. நாளைக்கு உன் மனைவி எழுதும் கடிதம் அவனுக்குப் போய்ச்சேரும். யாராவது பெயரை மாற்றிக்கொள்ளுங்கள்" என்று கட்டளையிட. நான் என் பெயரைச் சுருக்கமாக சொ.சொ.மீ. என்று மாற்றிக்கொண்டேன். வணிகம் படித்த என் பெயரை மட்டுமின்றி வாழக்கையையும் தமிழ் வாழ்க்கையாக மாற்றியவர் மாணிக்கனார்.

மாணிக்கனாரின் ஆராய்ச்சிநூல் தமிழ்க்காதல் வெளிவந்த நேரத்தில் அந்நூலைத் தமிழ்த்தாத்தா உ.வே. சாமி நாதையருக்குப் படையல் ஆக்கி இரண்டு என்சீர்விருத்தங்கள் எழுதினார்கள். கல்லூரியில் கலைக்கழகக்கூட்டம் முடிந்து புறப்பட்டோம். நாங்கள் மூன்று மாணவர்கள். பேராசிரியர் மாணிக்கனார் தன்னுடைய மிதிவண்டியைத் தள்ளிக்கொண்டே எங்களோடு வந்து. தான் எழுதிய 'பார்காத்தார் ஆயிரம்பேர்' என்ற அருமையான பாடலைச்

சொல்லி, அதற்கு விளக்கமும் சொல்லிக் கொண்டு, அவர்கள் வீடு வரை வந்தார்கள். சாமிநாதையரை வாழ்த்திய இரண்டாவது பாடல் 'நின்தாள் வாழ்க' என்று முடிந்தது. ''இதற்குப்பொருள் என்ன?'' என்று மாணிக்கனார் கேட்டார்கள். நாங்கள் உன் திருவடி வாழ்க என்று பொருள் சொன்னோம். "அப்படியும் பொருள் உண்டு. இன்னொரு பொருளும் உண்டு. தாள் என்றால் முயற்சி. நின்முயற்சி வாழ்க என்று ஒருபொருள். இன்னும் பல தமிழ்நூற்கள் பல வீட்டுப் பரண்களில் கிடக்கின்றன. அதைக் கண்டெடுக்கும் பணி தொடர வேண்டுமல்லவா'' என்று தன் தமிழ்க்காதலைக் காட்டினார் மாணிக்கனார்.

ஒல்லும் வகையெல்லாம் ஒவாதே தமிழ்த்தொண்டு செல்லும் வாயெல்லாம் செய்த மாணிக்கனாரைப் போன்ற தமிழ்ச்சான்றோர்களை இனி எப்பொழுது பார்க்கப் போகிறோம்? ஆண்டவன் மிக அருமையானவன். ஆனால் நம்மோடு வந்து பழகும் எளிமை மிக்கவன். அருமையில் எளிய அழகே போற்றி என்பது திருவாசகம். அந்த மாணிக்கவாசகரின் வரிகளுக்கு இந்த மாணிக்கனாரே சான்றாவார்.

நன்றிக்கு மறுவடிவம் மாணிக்கனார் தம்மை வளர்த்து ஆளாக்கிய ஆயா மீனாட்சி ஆச்சி தாய்வழிப்பாட்டனார் ஐயா அண்ணாமலைச் செட்டியார் ஆகியோரிடம் அவருக்கிருந்த நன்றி மனப்பான்மைக்கு எல்லையில்லை. தன் ஆசான் பண்டிதமணியைத் தெய்வமாக மதித்தார். அவர் பெயரால் தன் இல்லத்தைக் கதிரகம் என்று அழைத்து மகிழ்ந்தார். பண்டிதமணி நூற்றாண்டு விழாவில் அவர் நூற்களையும் அவரைப் பற்றிய நூற்களையும் வெளியிட்டார். எனக்கு ஆணையிட்டார். ''கிழவன் மீது நீ பிள்ளைத்தமிழ் பாடவேண்டும்" என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் முருகனை "பழமுதிர்சோலை மலைகிழவோனே" என்று அழைப்பதுபோலத்தன் ஆசானைகக் கிழவனாக்கினார். என்னைப் பார்க்கும் போதெல்லாம் உரிமையோடு "நீ எனக்குக் கடன்பட்டிருக்கிறாய். விரைவில் பிள்ளைத்தமிழ் பாடித் தந்துவிடு" என்று கட்டளையிட்டார். இறுதிக்காலத்தில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தமிழ்வழிக்கல்வி இயக்கம் தொடங்கி நூற்களைச் சுமந்துகொண்டு, காந்தியடிகள் தண்டி யாத்திரை செய்ததுபோல் தமிழ்யாத்திரை செய்தார். ''நம்முடைய பிள்ளைகள் தமிழ் படிக்காமல் போய்விடுவார்களே'' என்ற ஏக்கம் அவருக்கு உண்டாயிற்று. அதற்காகத் தன்னலம் பேணாமல் பல பகுதிகளுக்கும் தானே சென்று தமிழ்வழிக்கல்வியைத் தன் வாழ்வின் குறிக்கோளாக்கி, 1989-ல் நம்மை விட்டுப் பிரிந்தார். அவருடைய ஆசான் பண்டிதமணியும் 72 ஆண்டுகள் வாழ்ந்தார். மாணிக்கனாரும் 72 ஆண்டுகள் தமிழ்த் தொண்டாற்றி மறைந்தார். இவர்கள் கடைப்பிடித்த எளிமை, சிக்கனம், தமிழ்ப்பற்று, புகழை விரும்பாத வாழ்க்கை, நாணயம் ஆகியவை நம் இளைஞர்க்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. என் வாழ்க்கைக்கு அடிப்படை அமைத்துக் கொடுத்தவர் அவர். என் நெஞ்சிருக்கும் வரை அவர் நினைவிருக்கும்.

வெள்ளை மாளிகை

அமெரிக்க அதிபராக இருப்பவரின் இருப்பிடம் "வெள்ளைமாளிகை" (White House) என்று ஏன் அழைக்கப்படுகிறது தெரியுமா...?

1814ஆம் ஆண்டு அந்த அதிபர் மாளிகையில் ஏற்பட்ட ஒரு தீவிபத்தில் சுவர்கள் எல்லாம் தீப்பிழம்பால் கருகி கரையாகி விட்டனவாம்... அதன்பிறகு அந்தக் கரிய நிறத்தை மறைப்பதற்காக வெள்ளை பெயிண்ட் அடிக்கப்பட்டதாம். அதிலிருந்து அந்த மாளிகைக்கு வெள்ளைமாளிகை என்ற பெயரே நிலைத்து விட்டது.

எங்கள் வீட்டின் செல்லப்பிள்ளை ராமமூர்த்தி...!

- வி.என். சிதம்பரம்

சென்னை மலர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநராகவும், சேர்மனாகவும் இருந்து அந்த மருத்துவமனையை உலகத்தரத்திற்கு இணையான ஒரு மருத்துவமனையாக நிர்வகித்து செயலாற்றி வருபவர் டாக்டர். எஸ் இராமமூர்த்தி அவர்கள்.

அவரின் வளர்ச்சியையும், புகழையும் கண்டு அவரைப் பெற்ற தந்தையார் சொக்கலிங்கம்பிள்ளை அவர்கள் எவ்வளவு மகிழ்வும், பூரிப்பும் கொள்வாரோ... அதே அளவு பூரிப்பும், பெருமையும் கொள்பவன் நான்...

மலர் மருத்துவமனையின் இந்த அபரிதமான வளர்ச்சிக்குக் காரணம் ராமமூர்த்தியின் லட்சிய வெறியும், தனித்திறமையுமே காரணம் என்று நம்புகிறேன்.

ஏனெனில் ராமமூர்த்தியை பள்ளி மாணவப் பருவத்திலிருந்து என் மகன் வள்ளியப்பனின் பள்ளித்தோழனாக... இன்றைக்கும் தொடருகின்ற பால்ய நண்பர்களாக இருந்து வருவதை அறிந்திருக்கிறேன். அவர்கள் இருவரும் திருச்சி கேம்பியன் பள்ளியில் பயின்றவர்கள். பள்ளி விடுமுறை நாட்கள் என்றால் இராமமூர்த்தி எங்கள் இல்லத்தில்தான் இருப்பார்.

அப்படி எங்கள் இல்லத்திற்கு வருகின்றபோது என்னையும், என் மனைவியையும் அப்பா... அம்மா... என்று அழைப்பார். இன்றுவரை அதே பாசமும் பந்தமும் எங்கள் மீது கொண்டிருப்பதால் டாக்டர் ராமமூர்த்தி நாங்கள் பெறாமல் பெற்ற பிள்ளை என்றே நானும் என் மனைவியும் நினைத்துப் பெருமை கொள்கிறோம். எங்களிருவரின் நெஞ்சங்கவர்ந்த எங்கள் வீட்டு செல்லப்பிள்ளை டாக்டர் ராமமூர்த்தி...

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பார்களே அந்த இளம் கொழுந்தை அப்போதே கண்டேன். அதில் ஒரு மாபெரும் விருட்சத்தின் விலாசத்தை அன்றே அறிந்தேன். இன்று வியக்கிறேன். தனது தளராத முயற்சியால் உழைப்பால் மருத்துவ உலகில் தனக்கென்று ஒரு மிகச்சிறப்பான இடத்தைப் பிடித்திருக்கிறார் என்றால் அவரின் உழைப்பின் உயரம் மருத்துவ உலகினரையே வியக்க வைத்திருக்கிறது...

எவ்வளவு உயர்வு பெற்றாலும் இன்னும் என்னைப் பாசத்தோடு அப்பாவென அழைக்கும்போது நான் பேருவகை கொள்வதுண்டு. இவருக்கு நான் செய்த உதவி எள்ளின் முனையளவு தானிருக்கும். ஆனால் அவர் என்மீது பொழியும் அன்பும் பாசமும் இமயத்தின் அளவுக்கு இருக்கும்.

என் பிள்ளைகளுக்கெல்லாம் திருமணங்களை எங்கள் வீட்டில் தான் நடத்தியிருக்கிறேன். ஆனால் நான் பெறாமல் பெற்ற பிள்ளையாகக் கருதுகின்ற டாக்டர் ராமமூர்த்தியின் திருமணத்தை என் அன்னை மீனாட்சியின் சந்நிதியிலேயே நடத்தி வைக்கும் பெரும் பேறு பெற்றதை எண்ணி எண்ணி மகிழ்வதுண்டு. ஆனால் அவர் நான் செய்த சின்னச்சின்ன உதவிகளை எல்லாம் இன்றுவரை நெஞ்சில் நிறைத்து வைத்திருக்கிறார் எனும்போது எனக்கு ஐயன் வள்ளுவன் சொன்ன

தினைத்துணை நன்றி செயினும்,
பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்

என்ற குறள்தான் நினைவுக்கு வருகிறது. அதாவது தினை அளவாக மிகச்சிறிய உதவியே செய்யப் பெற்றிருந்தாலும்,

உதவியின் பயனை நன்கு அறிந்தவர் அதைப் பனை அளவு மிகப்பெரிய உதவியாகக் கருதுவர் என்பதற்கு உலகில் உதாரணம்தேடினால் அந்த உதாரணத்தின் முழு உருவம் தான் இந்த டாக்டர் எஸ். ராமமூர்த்தி. பணமும் புகழும் இவர் கண்களை மறைத்ததில்லை.

இவரிடம் இந்தப் பண்பைக் காணும்போது எனக்கு செட்டிநாட்டு அரசர் ராஜா சர். முத்தையா செட்டியார்தான் நினைவுக்கு வருகிறார். அவரும் அப்படித்தான். பணமும். புகழும் கொண்ட அரச குடும்பத்தை சேர்ந்தவர் என்றாலும் பழக்கத்திலும் பண்பாட்டிலும் சிறிதும் மாசு காண முடியாத மனோகுணம் கொண்டவர். அவர் செட்டிநாட்டு அரசராக இருந்தாலும் விருந்தினர்களை வரவேற்பது... உபசரிப்பது... விருந்துண்ணலின்போது... பணியாளர்கள் மத்தியில் சென்று விருந்தினர்களை நேரடியாகவே கவனிக்கும் பாங்கு கொண்டவராக திகழ்ந்தார். அவரைப்போல ஒவ்வொரு குணமும் ராமமூர்த்தியிடம் இருப்பதைக் கண்டு வியந்திருக்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன்...

ராமமூர்த்தி என்னை எப்படி அப்பா... அப்பா... என்று அழைத்து எங்கள் இல்லத்திற்கு வருவாரோ அதைப்போலவே என் இரண்டாவது மகன் நாகப்பனின் மகனான என் ஆறு வயதுப்பேரன் ராமமூர்த்தியை பெரியப்பா... பெரியப்பா... என்று அழைத்து வருகிறான். டாகடரின் வீட்டுக்கு எதிர்வீடு நாகப்பனின் வீடு. ராமமூர்த்திக்கு மூன்று பெண்குழந்தைகள். ஆண்குழந்தை இல்லை. என்பதால் என் பேரனை டாக்டரும் மகனாகததான் பார்க்கிறார். அவனுக்கு அவன் வீட்டில் இருப்பதைவிட அதிகநேரம் டாக்டரின் வீட்டில்தான் இருப்பான். இவன் வீட்டில் ப்ரிஜ்ஜில் என்ன திண்பண்டம் இருக்கிறது என்பதைவிட பெரியப்பா வீட்டு ப்ரிஜ்ஜில் என்ன இருக்கிறது என்பதுதான் அவனுக்கு அதிகமாகத் தெரியும். பேரனை காணாமல் தேடினால் டாக்டரின் பெட்ருமில் உறங்கிக் கொண்டிருப்பான். டாக்டரின் குழந்தைகள் மதிமலர். ரதிமலர். திவ்யமலர் ஆகியோருக்கு உடன்பிறவாத தம்பியாக என் பேரன் இருக்கிறான் எனும்போது தலைமுறை பந்தம் போல இந்த உறவு தொடர்கின்றதைப் பார்க்கும்போது ஏதோ ஓர் இனம் தெரியாத உள்ளுணர்வில் பூரிப்படைகிறேன்.

ஒரு முறை என் மனைவியை உடல் நலக்குறைவால் சென்னை மலர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்ந்திருந்தோம். ராமமூர்த்தி வந்து பார்த்துவிட்டு. அங்கே உள்ள சக டாக்டர்கள். நர்ஸுகள். அலுவலக உதவியாளர்கள் அனைவரிடத்திலும் சொன்னது இன்று நினைத்தாலும் எனக்கு புல்லரிக்கிறது. "இவங்க எங்க அம்மா. எல்லோரும் நல்லா அன்பாகக் கவனிக்கணும்" என்று ஒவ்வொருவரிடம் சொன்னார். அவரின் தாய் இந்திராணி அம்மையாரை இழந்திருந்தாலும் என் மனைவியை அம்மா.. அம்மா... என்றழைத்து அந்த இழப்பை ஈடு செய்து விட்டார் என்றே கருதுகிறேன். மலர் மருத்துவமனை ஊழியர்கள் முழு ஈடுபாட்டோடு மருத்துவமனை உயர்வுக்கு உழைக்கிறார்கள் என்றால் அதில் அவரின் செயலாளர் ஷெட்டி என்பவரும் ஒருவர். ராமருக்கு எப்படி ஒரு அனுமனோ... அதைப்போல இந்த இராமமூர்த்திக்கு அந்த ஷெட்டி என்பவர். எந்தச் செயலையும் முடித்து விடும் பெருங்குணம் கொண்டவர். அப்படி முழு ஈடுபாட்டோடு காரியமாற்றும் செயலாளர் இந்த ஷெட்டி.

மலர் என்னும் மருத்துவக் குடும்பத்தினரின் தலைவராக, நிர்வாக இயக்குநராகப் பணியாற்றும் டாக்டர். எஸ். ராமமூர்த்தி அவர்களுக்கு என் அன்னை மீனாட்சி என்றும் ஆசி வழங்க வேண்டுகிறேன். அந்தச் செல்லப்பிள்ளையின் பேட்டியை ஆசையோடு நான் வெளியிடுவதில் மகிழ்வடைகிறேன்...

சென்னை அடையாரில் நோய் தீர்க்கும் ஆலயமாகத் திகழும் ஒரு மருத்துவமனை மலர் மருத்துவமனை. அதன் சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர்

டாக்டர். எஸ். ராமமூர்த்தி

அவர்களுடன் நேர்காணல்

சந்திப்பு: சி. நாகேஸ்வரன்



குரல் : வணக்கம் டாக்டர்... எங்கள் நகரத்தார்குரல் மாத இதழின் மூலம் குரலின் ஆயிரக்கணக்கான வாசகர்களிடம் தங்கள்அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள சம்மதம் தெரிவித்தமைக்கு நன்றி சார்... உங்கள் பரபரப்பான மணித்துளிகளில் ஒரு அரைமணிநேரம் ஒதுக்கித் தந்தமைக்கு எங்கள் ஆசிரியர் மீனாட்சி திருமைந்தர் வி.என். சிதம்பரம் அவர்களின் சார்பில் நன்றி வணக்கம்...

அவர் வணக்கமும் நன்றியும் நான்தான் சொல்லவேண்டும். நகரத்தார்குரல் மாத இதழின் ஆயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன் என்பது எனக்குப் பெருமை. மீனாட்சி திருமைந்தர் அய்யா வி.என்.சிடி. அவர்களின் அன்பைப் பெற்றவன் என்ற முறையிலும் எனக்கு தந்தையாக. நல்ல ஆசானாக என் வளர்ச்சியின் மீது அன்பும் அக்கறையும் கொண்ட அப்பா வி.என்.சிடி. அவர்களுக்கும் குரலின் வாசகர்களுக்கும் என் நன்றிகள்...

குரல் : தங்கள் சொந்த ஊர், பெற்றோர், உடன்பிறந்தோர் பற்றிக் கூறுங்கள் டாக்டர்...?

அவர் : நான் பிறந்தது திருவையாறு. ஆனால் வளர்ந்தது எல்லாம் சிவகங்கை மாவட்டம் நகரத்தார் சீமையான காரைக்குடிக்கு அருகிலுள்ள பாதரக்குடி எனும் கிராமம் தான். என் தந்தையார் ஆர்.எம். சொக்கலிங்கம்பிள்ளை. தாயார் இந்திராணி அம்மாள். என்னோடு பிறந்தவர்கள் ஒன்பதுபேர். 5 பெண்கள் என்னோடு 4 ஆண்கள்

குரல் : இளமைக்கல்வி ற்றி கூறுங்களேன்...?

அவர் நான் இரண்டாம் வகுப்பு வரை பாதரக்குடி ஆரம்பப்பள்ளியில் படித்தேன் பிறகு தந்தை திருச்சியில் எக்ஸ்போர்ட் பிஸினஸ் செய்து வந்ததால் திருச்சி கேம்பியன் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தேன் என் இளமைக்கால நண்பர் அய்யா வி.என்.சிடி. அவர்களின் மூத்தமகன் வள்ளியப்பன் தான். இன்றுவரையும் அவர்தான் என் நண்பர். அந்தநாட்களில் வள்ளியப்பன் ஸ்கூல்பீஸை எனக்குத்தான் முதலில் கட்டுவார். பிறகுதான் அவருடைய பீஸைக் கட்டுவார். நான் விடுமுறை நாட்களில் அவர் வீட்டுக்குத்தான் செல்வேன். அவரின் அப்பா. அம்மா இருவரையும் நானும் அப்பா அம்மா

என்றுதான் இன்றுவரை அழைத்து வருகிறேன். அவர்களின் பிள்ளைகளில் நானும் ஒருவன் என்றுகூடச் சொல்லலாம். எனக்கு நல்ல நண்பனாக ஓர் உடன்பிறவா சகோதரனாக இருப்பவர், இருந்து கொண்டிருப்பவர் வள்ளியப்பன் அவரின் மீதும் அந்தக் குடும்பத்தின் மீதும் அதிகப்பாசம் கொண்டிருப்பவன். இன்று நேற்றல்ல... ஒரு முப்பதாண்டு காலபந்தம் என்றுதான் சொல்லவேண்டும்.

குரல் : டாக்டருக்குப் படிக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்களா...?

அவர் : விரும்பினேன் என்பதை விட அது எனக்குள்ளிருந்த தவம் என்றுதான் சொல்வேன். காரணம் என்னான்னா... எனக்கு ஒரு தம்பி இருந்தான். அவன் உடல்நலமின்றி மிகவும் துன்பப்பட்டான். நான் பாதரக்குடியிலிருந்து சைக்கிளில் காரைக்குடிச் செல்வேன். அங்கிருந்து டாக்டரை பாதரக்குடிக்கு அழைத்து வருவேன். மீண்டும் டாக்டரை சைக்கிளில் கொண்டுபோய் காரைக்குடியில் இறக்கிவிடுவேன். இப்படி சைக்கிளில் போகும்போது எனக்குள் நானே எப்படியாவது டாக்டராக வேண்டும்... எப்படியாவது டாக்டராக வேண்டும் என்று சொலலிக்கொண்டே சைக்கிளை ஓட்டுவேன். ஒருநாள் தம்பி மரணமடைந்து விட்டான். அன்றிலிருந்த என் வேட்கையும் டாக்டராக வேண்டும் என்ற உந்துதலும் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

குரல் : டாக்டருக்குப் படிக்கத் தேவையான வசதி தங்கள் குடும்பத்தில் இருந்தனவா?

அவர் : எங்கள் தாத்தா வியட்நாம் நாட்டிற்குச் சென்று வணிகம் செய்து பெரும் தனவந்தராய் புகழ் பெற்றவர். ஆனால் இரண்டாம் உலகப் போரில் பாதிக்கப்பட்ட ஏராளமான நகரத்தார் குடும்பங்களில் எங்கள் தாத்தாவும் ஒருவர். செல்வங்களை எல்லாம் இழந்துவிட்ட நிலையில் துன்பப்பட வேண்டியதாயிற்று. ஆகவே டாக்டருக்கு என்னைப் படிக்கவைக்க வேண்டிய வசதி எங்கள் குடும்பத்தில் இல்லை. இருந்தாலும் டாக்டருக்கு தேவையான 'மெரிட்' படிப்புத்தகுதி எல்லாம் என்னிடமிருந்தது. ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் படிச்சேன். திருச்சி கேம்பியன் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தபோது 2 சப்ஜெக்டில் சென்டம் வாங்கினேன். மாநில அளவில் 8வது ரேங்கும் பெற்றவன் நான். திருச்சி செயிண்ட் ஜோஸப் கல்லூரியில் சேர்ந்தேன். 1969-70 பி.யூ.சி.யில் அனைத்துப் பாடங்களிலும் டிஸ்டிங்சன் பெற்றேன். பிறகு எம்.பி.பி.எஸ். மதுரை மருத்துவக் கல்லூரியில் 1970லிருந்து 1977 வரை மெரிட் ஸ்காலர்ஷிப் பெற்றுப் படித்தேன். 1978-79 ஓராண்டு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் ஹவுஸ் சர்ஜனாகப் பயிற்சி பெற்றேன்.

குரல் : எம்.பி.பி.எஸ்.க்குப் பிறகு பி.ஜி. பண்ணும் எண்ணம் இருந்ததா...?

அவர் : டாக்டர் ஆகவேண்டும் என்ற இலட்சியத்தில் வெற்றி பெற்று விட்டதாக கருதினேன். பி.ஜி. படிக்க வேண்டிய எண்ணத்தைக் காட்டிலும் பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு இருந்தது. குடும்பத்தினரின் முன்னேற்றத்திற்கு நான் சம்பாதிக்க வேண்டியது அவசியமாயிருந்தது.

குரல் : எங்கு டாக்டராகப் பணியுரிந்தீர்கள்...?

அவர் : 1978 ஹவுஸ் சர்ஜன் பயிற்சி முடித்தவுடனேயே வெளிநாடு செல்ல வேண்டும். அங்கு நல்ல சம்பளம் கிடைக்கும் என்ற எல்லோருக்கும் இருந்த ஆவல் எனக்குமிருந்தது மேல்நாட்டு மருத்துவமுறைகளை அனுபவரீதியாகப் பயிற்சி

பெறலாம் என்ற நம்பிக்கையும் இருந்ததால் எனக்கு அப்படி ஒரு வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மலேசியா நாட்டிற்குச் சென்றேன். அங்கு 'டாக்டர் பாணி நர்ஸிங்ஹோமில்' மெடிக்கல் ஆபிஸராக 1979லிருந்து 1980 வரை ஓராண்டு பணிபுரிந்தேன். பிறகு ஜப்பானிய நிறுவனத்தின் சார்பில் சவுதி அரேபியாவில் "Yanbu" என்ற ஊரில் Charge of Fudoconsortioum Clinic-ல் கன்சல்டண்ட் ஆக பணியாற்றினேன். பிறகு சவுதி அரேபியாவில் உள்ள அமெரிக்க நிறுவனமான Hastt-Main Company யில் கன்சல்டன்டாகவும் பணியாற்றினேன்.

குரல் : உங்கள் மனைவி, குழந்தைகள் பற்றி கூறவில்லையே...?

அவர் : நான் மதுரை மருத்துவக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது மலேசியாவிலிருந்து வந்து மதுரை மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். படித்துக் கொண்டிருந்த சகமாணவி தான் என் மனைவி நித்யா. படிக்கும்போதே அவருக்கும் எனக்கும் காதல் ஏற்பட்டது. அப்போது காதல் என்ற சொல்லையே ஏற்றுக்கொள்ளாத ஒரு காலம். ஆனால் இன்றைய காலங்களில் காதலில்தான் எவ்வளவு மாற்றம். இண்டர்நெட்-ல் கூட காதல் மலரும் அளவிற்கு உலகத்தின் வலை விரிந்திருக்கிறது. காதலை அங்கீகரிக்கும் எண்ணமும் பெற்றோர்களிடம் ஓரளவு வளர்ந்திருக்கிறது. ஆனால் அப்போது அப்படி இல்லை. எங்கள் பெற்றோரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் வீட்டிலும் கடுமையான எதிர்ப்பு. ஆனால் நான் என் பெற்றோரை ஓரளவு சமாதானம் செய்து சமாளித்து சம்மதம் பெற்று விட்டேன். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் அன்றைய தக்காராக உங்கள் ஆசிரியர் அப்பா வி.என்.சிடி இருந்தார். என் தந்தையும், அப்பா வி.என்.சிடி.யிடம், "நீங்களே திருமணத்தை நடத்தி வையுங்கள்" என்றார். அன்னை மீனாட்சியை சாட்சியாக வைத்து அவளின் மைந்தர் அப்பா வி.என்.சிடி. அவர்கள்தான் 1976-ல் எங்கள் திருமணத்தை நடத்தி வைத்தார். நேராக ரிஜிஸ்டர் ஆபீஸில் பதிவு செய்து விட்டு நண்பர்கள் ஒரு பத்து, பதினைந்து பேரோடு ஹோட்டலில் சாப்பிட்டோம். பிறகு நான் ஆண்கள் ஹாஸ்டலுக்கும், என் மனைவி பெண்கள் ஹாஸ்டலுக்கும் பிரிந்து சென்று விட்டோம். மறுநாள் எக்ஸாம் என்பதால் படிக்க வேண்டியிருந்தது. பிறகு ஒரு வருடமாக என் மனைவி வீட்டார் ஏற்கவில்லை. அப்புறம் ஏற்றுக்கொண்டார்கள்.

குரல் : நீங்கள் டாக்டராக உயர்வதற்கு உதவியவர்கள், காரணமானவர்கள்...?

அவர் : என் தந்தையார் சொக்கலிங்கம் அவர்களும், என் தாயார் இந்திராணி அம்மாள் அவர்களும்தான். இன்று இந்த மலர் மருத்துவமனையின் வளர்ச்சியிலும், புகழிலும் அவர்களின் பங்கும் ஆசியும் உண்டு. இன்று அம்மா உயிரோடு இல்லை. அப்பா மட்டும் என்னுடன் இருக்கிறார்.

மேலும் அப்பா வி.என்.சிடி., வள்ளியப்பன், சோமசுந்தரம், திருச்சி டாக்டர் ஜமீர் பாட்ஷா போன்ற நண்பர்களும் என் உயர்வுக்கு காரணமாக இருந்திருக்கிறார்கள்.

குரல் : இதுபோன்ற பெரிய மருத்துவமனை அமைக்கும் எண்ணம் எப்போது ஏற்பட்டது?

அவர் : நான் நகரத்தார் சீமையைச் சேர்ந்தவன் என்பதால் அவர்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் அருகேயிருந்து கவனித்து வந்தவன். அவர்களின் சின்ஸியாரிட்டி, நாணயம், திட்டமிட்டு எதையும் செய்யும் குணம், தேவையான செலவுகள் செய்வது,

வடஇந்திய சுற்றுலா & காசி யாத்திரை

பத்ரி - கேதார்நாத் - அமிர்தசரஸ் - காசி 2–5–2000 முதல் 21 நாட்கள்:
டெல்லி-அமிர்தசரஸ்-ஜெய்ப்பூர்-ஆக்ரா-மதுரா-பிருந்தாவன்-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 7,350-00

பத்ரி - கேதார்நாத் - காசி யாத்திரை 4–5–2000 முதல் 21 நாட்கள்:
டெல்லி-அமிர்தசரஸ்-ஜெய்ப்பூர்-ஆக்ரா-மதுரா-பிருந்தாவன்-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 6,300-00

காசி யாத்திரை 1–5–2000 மற்றும் 16–5–2000. 15 நாட்கள்:
டெல்லி-ஆக்ரா-மதுரா-பிருந்தாவன்-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 4,700-00

பத்ரி - கேதார்நாத் - காசி - நேபாள் - கல்கத்தா - மும்பை 1–5–2000 முதல் 29 நாட்கள்:
டெல்லி-ஆக்ரா-மதுரா-பிருந்தாவன்-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 9,100-00

சிம்லா ஸ்பெஷல் 16–5–2000 முதல் 11 நாட்கள்:
டெல்லி - ஆக்ரா - பிருந்தாவன் - சண்டிகார்-சிம்லா-டெல்லி நபர் 1க்கு ரூ. 3,490-00.

சிம்லா - குளு - மணாலி 16–5–2000 முதல் 14 நாட்கள்:
சென்னை-டெல்லி - ஆக்ரா - பிருந்தாவன் - சண்டிகார்-சிம்லா-டெல்லி நபர் 1க்கு ரூ. 4,700-00.

காசி-நேபாள்-கல்கத்தா 17–5–2000 முதல் 12 நாட்கள்:
சென்னை - காசி - காட்மண்டு - கல்கத்தா - பூரி - புவனேஸ்வர் - கோனார்க். நபர் 1க்கு ரூ. 4,200-00

டெல்லி-நைனிடால்-முசௌரி 25–5–2000 முதல் 12 நாட்கள்:
டெல்லி-நைனிடால்-ஜெய்ப்பூர்-பதேபூர்சிக்ரி. நபர் 1க்கு ரூ. 3,999-00

காசி யாத்திரை 18–6–2000 முதல் 15 நாட்கள்:
டெல்லி-ஹரித்துவார்-ஆக்ரா-மதுரா-காசி-கயா. நபர் 1க்கு ரூ. 4,700-00

பத்ரிநாத்-கேதார்நாத்-காசியாத்திரை 4–5–2000 முதல் 21 நாட்கள்:
டெல்லி-ஆக்ரா-மதுரா-ஹரித்துவார்-ரிஷிகேஷ். நபர் 1க்கு ரூ. 6,300-00

பஞ்சதுவாரகை 9 ஜோதிர்லிங்க யாத்திரை 18–6–2000 முதல் 23 நாட்கள்:
சென்னை-உஜ்ஜியினி-கோமதிதுவாரகா. நபர் 1க்கு ரூ. 6,300-00



ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9 வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
போன்: 629365, 624168, 650784 பேக்ஸ்: 0452-629365

தேவையற்றவைகளை ஒதுக்குவது... ஆலயத்திற்கு அள்ளிக்கொடுக்கும் மனோகுணம், வாணிபத்தில், தொழிலில் ஒரு அக்கறையோடு செயலாற்றும் திறன் இவைகளையெல்லாம் நான் நன்கு அறிந்தவன். அவர்களைப் பார்த்து நானும் நிறைய கற்றுக்கொண்டேன் என்றுகூட கூறலாம்.

டாக்டர் எம்.ஏ.எம்., ஏசி. முத்தையா, எம்.ஏ. சிதம்பரம் இவர்களைப் போல நாமும் இண்டஸ்ட்ரி, பிஸினஸ் என்று தொடங்கவேண்டும் என்ற எண்ணமும் எனக்குள்ளேயே வளர்ந்து வந்தது.

குரல் : மலர் மருத்துவமனை அமைப்பதற்கான அடித்தளம் எப்படி உருவானது?

அவர் : நான் மலேசியாவில் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்தேன் ஆனால் கிடைக்கவில்லை. அதனால்தான் சவுதிக்குச் சென்ற பிறகு பணம் சம்பாதித்து சென்னை வந்தேன். 1986-ல் சென்னை சி.பி. ராமசாமி தெருவில் ஒரு கிளினிக்கைத் தொடங்கினேன் அதைத் தொடங்கும்போதே கொஞ்சம் வித்தியாசமாகவும், மாடர்னாகவும் தொடங்கினேன். வெளிநாட்டில் இருப்பதைப் போலவே ஆரம்பித்தேன். எல்லா வசதிகளும் இருக்குமாறு அமைத்தேன். இ.சி.ஜி. லேப் டெஸ்ட், எக்ஸ்-ரே என்று வெளியே எழுதி அனுப்பாமல் எல்லாம் ஒரே இடத்தில் இருக்குமாறு ஆரம்பித்தேன். விசிட்டர்ஸ் ஹாலில் நல்ல ஷோபாசெட், அறை முழுவதும் ஏசி என்று அந்தச் சிறிய கிளினிக்கில், நிறைய செலவு செய்து அமைத்தேன். வருகின்ற 'கிளைண்ட்ஸ்' கன்சல்டிங் பீஸ் ரூ. 50 என்றாலும் பரவாயில்லை இவ்வளவு வசதியுடன் வைத்திருக்கிறார் என்ற திருப்தியுடன் பணம் தரவேண்டும் என்ற உணர்வோடு அமைத்தேன்.

அந்த கிளினிக்கிற்கு அப்போதே சூப்பர் ஸ்டார் ரஜினி, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, நடிகர் பாக்கியராஜ் எல்லாம் வந்து சென்றிருக்கிறார்கள். இந்தச் சிறிய இடத்தில் இப்படி சகல வசதியுடன் ரிச் ஆக அமைத்திருக்கிறீர்களே, பெரிய ஹாஸ்பிடல் கட்டலாமே என்று வருகை தரும் பிரமுகர்கள் எல்லோரும் ஆலோசனைகளை சொன்னார்கள்.

குரல் : அப்போது உங்கள் உள்ளத்தில் உந்துதல் பிரவாகமாகியதா...?

அவர் : என்னுடைய குறிக்கோளுக்கு நண்பர்கள், பிரமுகர்கள் எல்லாம் உரமிட்டார்கள். ஒருநாள் இந்தியன் வங்கி சேர்மன் திரு. கோபாலகிருஷ்ணன் அவர்கள் காலில் அடிபட்டு கிளினிக்கிற்கு வந்தார். சிகிச்சை பெற்றுக் கொண்டு போகும்போது, "என்ன டாக்டர் இப்படி சின்ன கிளினிக் வைத்து நடத்துவதுதான் உங்கள் திட்டமா? சென்னையில் பெரிய ஆஸ்பிடல் கட்டும் எண்ணம் எல்லாம் இல்லையா...? சென்னையில் என்று கூறிவிட்டு... ஒரு புராஜெக்ட் ரெடி பண்ணி என்னை வந்து வாருங்கள்" என்று சொல்லிவிட்டு சென்றார்.

குரல் : புராஜெக்ட் ரெடி செய்து போய்ப் பார்த்தீர்களா...?

அவர் : ஆமாம். ஒரு நான்கு கோடி ரூபாய் மதிப்பீட்டில் புராஜெக்ட் ரெடி செய்து இந்தியன் வங்கி சேர்மன் திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களைச் சந்தித்தேன் அதற்கு சேர்மன் அவர்கள், பெரிய புராஜெக்ட் ஆக கொண்டு வாருங்கள் என்று மீண்டும் திருப்பி விட்டார் பிறகு 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புராஜெக்ட் ரெடி செய்து கொண்டு போனேன். அதையும் பார்த்துவிட்டு இன்னும் பெரியதாகக் கொண்டு வாருங்கள் டாக்டர் என்றார். அப்புறம் நான் ஒரு இருபது கோடி

ரூபாயில் புதிய புராஜெக்ட் கொண்டு போனேன். ஓ.கே. என்று சொல்லி எல்லாம் நடைபெற்று முடிந்தபோது மலர் மருத்துவமனை 30 கோடி ரூபாயைத் தாண்டி விட்டது.

குரல் : எப்போது கட்டத் தொடங்கினீர்கள்...?

அவர் : 1989-ல் தொடங்கி 1992-ல் முடிக்கப்பெற்றது. தொடங்கிய ஆறாண்டுகளில் அபரிதமான வளர்ச்சி. குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய கார்ப்பரேட் ஹாஸ்பிடல் ஆக வளர்ந்திருப்பது எனக்கு ஆச்சரியமாகத்தான் உள்ளது.

குரல் : மருத்துவமனைக்கு மலர் என்ற பெயரை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்...?

அவர் : எனக்கு மூன்று பெண் குழந்தைகள். முதல் இரண்டு குழந்தைகளும் இரட்டையர்கள். ரதிமலர், மதி மலர், மூன்றாவது குழந்தை திவ்யமலர் என்று பெயர் வைத்தேன். என் மனைவி நித்யாவை முதல் பிரசவத்திற்கு செல்வதற்கு முன்பாக ஒரு கோயிலுக்குச் சென்று சாமி கும்பிட்டோம். அர்ச்சகர் திருநீறு தருகின்றபோது இரண்டு மலர் என் கைகளில் வந்து விழுந்தது. நான் அப்போதே பிறக்கப்போவது பெண் குழந்தைதான் என்று தீர்மானித்தேன். வயிற்றுக்குள்ளிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று அறியும் ஸ்கேன் வசதியெல்லாம் அப்போது இல்லாத காலம். இரண்டு மலர்களை கொடுத்து இரட்டை பெண்குழந்தைகள் என்று சிம்பாலிக்காக இறைவன் உணர்த்தியதாகவே உணர்ந்தேன். அதிலிருந்து மலர் என்று பெயர் சூட்டுவதை விரும்பினேன்.

குரல் : உங்கள் குழந்தைகளின் பெயரில்தானா...?

அவர் : அப்படியும் வைத்துக்கொள்ளலாம். இன்னும் சொல்லப்போனால் மலர் என்பது மிகவும் மென்மையானது. அழகான தமிழ்ப்பெயர் அல்லவா...! மலர் என்ற வார்த்தை எவ்வளவு பொதுவானது. யாருடைய மனதையும் எளிதாகக் கவரும் தன்மை மலருக்கு உண்டு... பெண்கள் முதல் குழந்தைகள் வரை, பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை விரும்பும் பெயரல்லவா... மலர் என்னும் வார்த்தை அதுவும் போக மலர் எனும்போது ஒரு 'குளோசர்' மிகமிக அருகிலிருக்கும் உணர்வு அந்த வார்த்தைக்கு உண்டு. ஜனரங்கமான ஒரு பெயர், தரமான மலர் என்ற பெயர்... தமிழகமெங்கும் குறுகிய காலத்தில் புகழ் பரவியதற்கு அந்த மலர் என்ற தமிழ்ப்பெயரே காரணம் என்று கருதுகிறேன். மருத்துவமனை விழாவில் இயக்குநர் இமயம் பாரதிராஜா பேசும்போது, "இவ்வளவு பெரிய ஆஸ்பத்திரியை ஒரு தனிமனிதனாக உருவாக்குவது சாதாரணமானது அல்ல. ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரரோ... கிறிஸ்துமிஷன் போன்ற அமைப்புகளோ, அப்பல்லோ, விஜயா மருத்துவமனைகள் மட்டும் செய்யக்கூடிய ஒரு செயலைத் தனி ஒரு தமிழன் சாதித்திருக்கிறார் என்றால் அவர் தான் டாக்டர் எஸ். ராமமூர்த்தி" என்று பாராட்டிப் பேசினார். மேடையில் பேசியதோடு மட்டுமல்லாமல் எல்லோரிடமும் வியந்து பாராட்டிக் கொண்டேயிருப்பார்.

குரல் : மலேசியா, சவுதி மருத்துவமனைகளில் பணியாற்றிய அனுபவங்களைக் கூறுங்களேன்...?

அவர் : வெளிநாட்டில் நான் மருத்துவமனைகளில் பணியாற்றியபோது அங்கு உள்ள மருத்துவமனைகள் ரொம்ப மாடர்னாக எல்லா அறைகளும் ஏசி வசதியுடன் ரொம்ப அட்வான்ஸாக இருந்தது. இந்தியாவிலிருந்து சென்ற எனக்கு அது ஒரு

புதிய அனுபவமாக இருந்தது. சிறிய கிளினிக் கூட ஆடம்பரமாகவும் எல்லா மருத்துவ வசதிகளும் உள்ளனவாக இருந்தது.

அங்கு சின்ஸியாரிட்டி வொர்க் ரொம்ப மிகவும் முக்கியம். தொழிலில் போட்டியையும் சந்திக்க வேண்டியிருந்தது. அமெரிக்கா, பிரிட்டிஷ், பிலிப்பைன்ஸ் போன்ற எல்லா நாடுகளைச் சேர்ந்த பலவிதமான டாக்டர்களின் போட்டிகள் கடுமையாக இருக்கும். சாதாரண நர்ஸிடம்கூட மருத்துவஞானம் மிகுதி. புதிய ஒரு டாக்டருக்கு ஆலோசனை சொல்லும் அளவிற்கு நர்ஸ்கள் தொழிலில் முன்னோடியாக இருப்பார்கள். அந்த இடத்தில் போய் எனக்கு அது தெரியாது, இது தெரியாது என்று சொல்ல முடியாத நிலை. அவர்களுக்கு இணையாகச் செல்லவேண்டும் என்ற உந்துதலிலும் சில நாட்களிலேயே எனக்கென்று ஓர் இடத்தை தேர்வு செய்து கொண்டேன். டாக்டர் ராமமூர்த்தி ஒரு பெஸ்ட் என்று சொல்லி என்னைப் பாராட்டும் அளவிற்கு என் தொழிலில் வேகமும், விவேகமும் வந்து விட்டது.

குரல் : அரசு மருத்துவமனையை விடுத்து தனியார் மருத்துவமனைகளை மக்கள் நாடுவதற்கு காரணம் என்ன...?

அவர் : நடுத்தர வர்க்கத்தினர்கூட தனியார் மருத்துவமனையை நாடுகின்றனர். காரணம் என்னன்னா... மக்களிடம் ஹெல்த் பற்றிய அவேர்னெஸ் வளர்ந்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப நமது அரசு மருத்துவமனையில் கூட்டம் அதிகமாகி வருகிறது. அதற்கான சாதாரண சுகாதாரப் பணிகளைக்கூட நிவர்த்திக்க முடியவில்லையே...

மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப அரசு மருத்துவமனைகளில் வசதிகளையும் பெருக்கவேண்டும். அதற்கான நிதி ஆதாரங்கள் அரசிடம் இல்லை. புதிய புதிய நவீனக் கருவிகளைத் தனியார் மருத்துவமனைகள் நிறுவுகின்றன. ஆனால் அரசு மருத்துவமனைக்கு ஒரு சாதாரண நவீன உபகரணம் நிறுவுவதில் எத்தனை காலதாமதமாகிறது.

பைபாஸ் சர்ஜரி, ஆஞ்சியோகிராம் போன்ற சிகிச்சைகள் எல்லாம் இன்று தனியார் மருத்துவமனைகளில் சர்வ சாதாரணமாக செய்யப்படுகின்றன. ஆனால் அரசு மருத்துவமனையில் டாக்டருக்கு வேண்டிய வசதிகள் இல்லை. தேவையான டாக்டர்கள், பணியாளர்கள், கருவிகள் என்று நிறுவ வேண்டும். மருத்துவத்திற்கென நிதி ஒதுக்கீட்டையும் அரசு அதிகப்படுத்தவேண்டும். இப்போதுள்ள அரசு மருத்துவமனைகளில் உள்ள ஸ்பெஷலிட்டீஸ்-க்கு ஏற்ப எவ்வளவு சர்வீஸ் செய்ய முடியுமோ அதை செய்து வருகிறார்கள்.

குரல் : தனியார் மருத்துவமனைகளின் வளர்ச்சி எண்பதுகளில்தானே அதிகமானது...?

அவர் : ஆமாம். நடுத்தரக் குடும்பத்தினர், அரசு ஊழியர் என்று வரும் நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளில் சில ஆயிரங்களைச் செலவழித்தாலும் எல்லா வசதிகளும் இருக்கும் மருத்துவமனைகளைத் தேடத் தொடங்கி இருக்கிறார்கள். தனியார் மருத்துவமனை குறுகியகால வளர்ச்சியில் சென்னை அப்பல்லோ மருத்துவமனை வந்த பிறகு, அதில் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பிறகும் ஒரு ஏழெட்டு ஆண்டுகள் தனியார் மருத்துவமனைகளை மக்கள் அவ்வளவாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது உண்மைதான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மக்களிடம் நம்பகத்தன்மையை



மலர் மருத்துவமனைக்கு வருகைதந்த முதல்வர் கலைஞரை
வரவேற்கிறார் டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...




காஞ்சிப் பெரியவர்களிடம் ஆசி பெறுகிறார் ...



டாக்டரின் பிறந்த நாளில் கேக் ஊட்டுகிறார் சூப்பர் ஸ்டார் ...



டாக்டர் **M.A.M.,** மூப்பனார் அவர்களோடு
டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



குடியரசுத்தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களோடு
டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



மலர் மருத்துவமனையின் எழிலான தோற்றம் ...



முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களோடு
டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



மலேசிய அமைச்சர் டக்தோ சாமிவேலு அவர்களை வரவேற்கும்
டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



மத்திய அமைச்சர் பலராம் ஜாக்கர் அவர்களிடம் விருதுபெறும்
டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



தமிழக முதல்வரை வரவேற்கும் டாக்டர். எஸ். இராமமூர்த்தி,
நித்யா தம்பதியர் ...



மலர் மருததுவமனை விழாவில்
கேரள முன்னாள் முதல்வர் வாசுதேவன் நாயர் ...



அப்பல்லோ மருத்துவமனை சேர்மன்
டாக்டர். பிரதாப் சி. ரெட்டி தம்பதியரோடு ...




பெரியவர் MACT., இந்தியன் வங்கி கோபாலகிருஷ்ணன்
ஆகியோர்களுடன் டாக்டர். எஸ். இராமமூர்த்தி



ஆசிரியர் VNCT மணிவிழாவில் மைந்தர் ராமமூர்த்தி
துணைவியரோடு அபிஷேகம் செய்கிறார் ...



லண்டனில் டாக்டர். ஜான் வில்ஸ்பை மற்றும் நண்பர்களோரடு
டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



லண்டனில் டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



சுவிட்சர்லாந்தில் டாக்டர். எஸ். இராமமூர்த்தி



எடின்பர்க் ராயல் காலேஜில் டாக்டர். ஜமீர்பாட்ஷா, டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



ஒரு விழாவில் கவர்னர் பீஷ்மநாராயண்சிங்,
டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



டாக்டர். A.C. முத்தையா, நமது ஆசிரியரோடு
டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



மலேசிய துணை அமைச்சர் டக்தோ சுப்பிரமணியன் அவர்களோடு டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



பாரிஸில் உள்ள 'வெற்றியின் சின்னம்' வாயிலில் டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...



இயக்குனர் பாரதிராஜா, டாக்டர். எஸ். இராமமூர்த்தி



ஸ்வீடனில் உள்ள முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட "எக்ஸ்ரே" கருவியின் அருகே டாக்டர். எஸ். இராமமூர்த்தி ...

வளர்க்க கார்ப்பரேட் ஹாஸ்பிடல்களாகவும், ஷேர்கள் என்றும் நடுத்தர வர்க்கத்தினரைக் கவரும்வண்ணம் தனியார் மருத்துவமனைகள் மக்களின் அருகே செல்லத் தொடங்கியது. மக்களும் மலர் மருத்துவமனையா...? அங்கு இன்ன இன்ன சர்வீஸ்கள் உள்ளன. இவ்வளவு செலவாகும்... அப்பல்லோவா, விஜயாவா... இந்த சிகிச்சைக்கு இங்கு செல்ல வேண்டுமே... இவ்வளவு சார்ஜ் ஆகும் என்ற அளவில் விழிப்புணர்வு வளர்ந்திருக்கிறது. பெரிய நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களின் உடல் நலங்களில் கவனம் செலுத்தி தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற டை-அப் செய்து கொள்கின்றனர். வங்கி மற்றும் பெரிய அரசு ஊழியர்கள் தங்கள் பெற்றோர்களை தனியார் மருத்துவமனைகளில் பார்த்து குணம் பெறச் செய்வதை தமது தகுதிக்கேற்றதாகவும், உயர்வாகவும் நினைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இதுபோன்ற எண்ணங்களும் விழிப்புணர்வும் வளர்வது தனியார் மருத்துவமனைகளின் வளர்ச்சிக்குக் காரணம் என்று சொல்லுவேன்.

குரல் : மெடிக்கல் இன்ஸ்யூரன்ஸ் திட்டம் பற்றி சொல்லுங்கள் ?

அவர் : இன்னும் பாருங்கள்... எதிர்வரும் ஆண்டுகளில் மருத்துவ இன்ஸ்யூரன்ஸ் எல்லாம் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தப் போகின்றன. இன்ஸ்யூரன்ஸ் நிறுவனங்கள் அதிகமாகவும், அரசின் பார்வையோடு புதுப்புது திட்டங்களோடு பல தனியார் இன்ஸ்யூரன்ஸ் நிறுவனங்களினால் ஏற்படும் போட்டிகளோடு மக்களைச் சந்திக்க வருகின்றன. ஏழை, எளியவர்கள்கூட பெரிய பெரிய தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் அளவிற்கு மாற்றங்கள் ஏற்படும் என்பது நிச்சயம்.

குரல் : மலர் மருத்துவமனையின் எதிர்காலத் திட்டம் என்ன...?

அவர் : சென்னையிலுள்ள மலர் மருத்துவமனையின் துணை மருத்துவமனைகளைத் தமிழகமெங்கும் நிறுவவேண்டும் என்ற திட்டம் உள்ளது. கோவை, மதுரை, திருச்சி, சேலம் போன்ற மாநகராட்சிப் பகுதிகளிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் அமைக்கும் பணியில் இப்போது இறங்கியிருக்கிறேன். இன்னும் சில ஆண்டுகளில் மதுரை மற்றும் கோவையில் நிறுவும் ஏற்பாடுகளை விரைவாகச் செய்து வருகிறேன். சென்னையில் உள்ள அளவுக்கு ஸ்பெஷாலிட்டி இல்லையென்றாலும் ஓரளவு ஹைகிளாஸ் சிகிச்சை மற்றும் உயிர் காக்கும் மையமாக அந்த துணை மருத்துவமனைகள் அமையும். எல்லா எமர்ஜென்ஸி கேஸ்களும் அட்மிட் செய்து காப்பாற்றும்வண்ணம் அது செயல்படும். உயிர் காப்பாற்றப்பட்ட பிறகு வேறு மேஜர் சர்ஜரி, மேஜர் கேஸ் போன்றவற்றிற்கு சிகிச்சை அளிப்பதற்கு சென்னை மலர் மருத்துவமனை தலைமையிடமாக இருக்கும் ஒரு கான்செப்டில் இந்தப் பணிகள் நடந்து வருகிறது.

அந்தமான் தீவிலும் மலர் மருத்துவமனை அமைப்பதற்கான டை-அப் பணிகள் நடந்து வருகின்றது. அதுவும் ஓரிரண்டாண்டுகளில் நிறைவுறும்

குரல் : தங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வி.ஐ.பி.கள் பற்றி...?

அவர் : வி.ஐ.பி. என்றால் எங்களிடம் வரும் ஒவ்வொரு கிளைண்ட்டும் எங்கள் மருத்துவமனைக்கு வி.ஐ.பி. தான் (சிரிக்கிறார்...) சென்னை நகரில் உள்ள திரையுலகப் பிரமுகர்கள், அரசியல்வாதிகள், தொழில் அதிபர்கள் என்று



பெற்றோர் ஆர்.எம். சொக்கலிங்கம்பிள்ளை - இந்திராணி அம்மாள் மணிவிழாவில் ஆசி பெறும் டாக்டர் எஸ்.ஆர்...



மீனாட்சி அம்மன் ஆலயத்தில் திருமணம் முடிந்து நண்பர்களுடன் காட்சி தரும் டாக்டர் எஸ். ராமமூர்த்தி - நித்யா தம்பதியர்...



நடிகர்திலகம் அவர்களோடு மருத்துவத்திலகம் டாக்டர் எஸ்.ஆர். (இளமையில்)



கவியரசரோடு டாக்டர் ராமமூர்த்தி மற்றும் நண்பர்கள் (இளமையில்)

அந்தப்பட்டியல் அதிகம். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவரின் குடும்பத்தினர், திரு. ரஜினிகாந்த், மற்றும் அனைத்து அரசியல் கட்சித்தலைவர்கள் அவர்களின் குடும்பத்தினர் என்று வந்து சிகிச்சை பெற்று சென்றிருக்கிறார்கள். முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம், எம்.ஜி.ஆர் அ.தி.மு.க. திருநாவுக்கரசு போன்றவர்களும் உண்டு. அவர்கள் எல்லாம் எங்கள் வி.ஐ.பி. கிளைண்ட்ஸ்...

நகரத்தார்கள் எம்.ஏ. சிதம்பரம், வி.என்.சிடி போன்ற ஏராளமான பிரமுகர்கள் எல்லாம் வந்து செல்வார்கள்.

எம்.ஏ.எம். அவர்களைப் பொறுத்தமட்டில் அவரின் உறவினர்கள் நண்பர்கள் ஏதாவது உடல் நலிவு என்றால் மலருக்குப் போங்கள் என்று உரிமையோடு அனுப்பிவைப்பார்.

குரல் : பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் சிலையை மருத்துவமனையின் நுழைவு வாயில் நிறுவியிருக்கிறீர்களே... ?

அவர் : நான் நகரத்தார் சீமையைச் சேர்ந்தவன் என்பதாலும், கற்பகவிநாயகரின் பக்தன் என்பதாலும்தான் அந்த விக்கிரகத்தை நிறுவியிருக்கிறேன். நான் எந்தவொரு காரியத்தை தொடங்குவதற்கு முன்பாக கற்பகவிநாயகர் ஆலயம் சென்று வழிபட்டு அதன்பிறகு அந்தக் காரியத்தைச் செய்வேன். அதில் எனக்கு வெற்றியும் மனநிறைவும் கிடைக்கின்றது. அதனால்தான் அந்த விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்திருக்கிறேன். அதுவும்போக கற்பகவிநாயகரை வழிபடாத எந்த நகரத்தாரும் இருக்கமாட்டார்கள். நகரத்தார்கள்தான் எங்கள் கிளைண்ட்ஸ்களில் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு ஹாஸ்பிடல் ஆக அமைந்திருப்பதும் ஒரு பெருமையான விஷயம் என்றுதான் சொல்லவேண்டும்.

குரல் : ஷேர் ஹோல்டர்ஸ்-ல் முக்கிய பிரமுகர் யார்... ?

அவர் : ஷேர் ஹோல்டர்ஸ்-ல் ரொம்பப்பேர் உள்ளனர். 1 ஷேர் ரூ. 10 என்பதால் ஒவ்வொருவரும் நிறைய ஷேர் வைத்திருக்கிறார்கள். ரஜினிகாந்த் அவர்கள் 15 லட்சம் மதிப்புள்ள ஷேர்ஸ் வைத்திருக்கிறார். மற்றும் திரையுலகப்பிரபலங்கள் கார்த்திக், பார்த்திபன், பாக்கியராஜ் போன்றவர்களும் பிரபல தொழிலதிபர்கள், தனியார் மற்றும் அரசு ஊழியர்கள் எல்லாம் ஷேர் ஹோல்டராக இருக்கிறார்கள். இன்னொரு விஷயம் என்னவென்றால் 1992-ல் இந்தியாவிலேயே 7 முறை ஷேர் விலை உயர்வானது, மலர் மருத்துவமனையில் பங்குகள்தான் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குரல் : காஞ்சி பெரியவர்கள் பற்றி... ?

அவர் : சுவாமிகள்... எப்படிப் பழக்கமென்றால் மலர் மருத்துவமனை கட்டுவதற்கான சம்பந்தப்பட்ட ஆவணங்களை எடுத்துக்கொண்டு பிள்ளையார்பட்டி சென்று கற்பகவிநாயகரின் ஆலயத்தில் பூஜை செய்துவிட்டு காஞ்சிப்பெரியவர் அவர்களிடம் ஆசி வாங்கலாமென்று நானும் என் மனைவியும் காஞ்சிமடத்திற்குச் சென்றோம். அங்கே கூட்டம் நிரம்பி வழிந்தது... நானும் என் மனைவியும் கூட்டத்தோடு நின்று கொண்டிருந்தோம். அந்தக் கூட்டத்திலும் சுவாமிகள் எங்களைப் பார்த்து கையை அசைத்து அழைத்தார்கள். நாங்கள் இருவரும் அருகில் சென்றோம். விபரம் சொன்னதும் அந்த ஆவணங்களை ஆசீர்வதித்துக் கொடுத்தார். ஆனால் சுவாமிகளுக்கும் எனக்கும் அதற்கு முன்பு எந்தவித

அறிமுகமும் இல்லை. ஆனால் அந்தக்கூட்டத்தில் எத்தனையோ முக்கியப் பிரமுகர்கள் எல்லாம் இருந்தும் எங்களை அழைத்து ஆசி கூறி மருத்துவமனை அமைப்பு இப்படி இருக்கவேண்டும் என்று ஆலோசனை சொன்னார். முழுமையான இறையருள் கிடைத்து விட்டதாகவே நான் உணர்ந்தேன்.

சுவாமி அவர்களும் தன் பக்தர்களின் உடல்நலக்குறைவு ஏற்பட்டவர்களுக்கு உடனே மலர் மருத்துவமனைக்குச் செல்லுங்கள் எல்லாம் குணமாகும் என்று சொல்வார்களாம். அவரின் ஆசி பெற்று வருபவர்கள் என்னிடம் சொல்லுவார்கள்.

குரல் : எயிட்ஸ், கேன்சர் போன்ற கொடிய நோய்களுக்கு புதிய மில்லினியத்தில் மருந்து கண்டுபிடிக்கப்படுமா...?

அவர் : நிச்சயமாக மருத்துவம் வெல்லும். எயிட்ஸ், கேன்சருக்கு மருத்துவம் கண்டு பிடிக்கப்படும். ஒரு காலத்தில் பெரியம்மை, ஆஸ்துமா, போலியோ இவற்றுக்கெல்லாம் மருந்து கண்டுபிடிக்கப்படுமா...? என்ற பெரிய சர்ச்சையே இருந்து வந்தது. இன்று அவையெல்லாம் மருத்துவத்தின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டது. அதைப்போலவே இந்த மில்லினியத்தின் துவக்கத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது...

குரல் : மருத்துவ வளர்ச்சியில் இந்தியாவை மேலை நாடுகளோடு ஒப்பிடுங்களேன்...?

அவர் : மேலைநாடுகளுக்கு இந்திய டாக்டர்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல... அவர்களைவிட மிகவும் சிறப்பாக செயல்படக்கூடிய அளவிற்கு மருத்துவமும், நவீனமும் நம் கைக்குள் வந்துவிட்டது. இன்னும் சொல்லப்போனால் வெளிநாடுகளில் பைபாஸ் சர்ஜரி மாதத்திற்கு ஒன்றிரண்டுதான் செய்கிறார்கள். ஆனால் நமது நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் ஒரு நாளைக்கு ஐந்தாறு ஆபரேஷன் சாதாரணமாக நடைபெறுகிறது. ஆகவே நமது மருத்துவர்கள் அனுபவரீதியான பழக்கங்களைப் பெற்று விடுகிறார்கள். வெளிநாடுகளில் பைபாஸ் சர்ஜரி செய்வதற்கு சுமார் 10 லட்சத்திலிருந்து 15 லட்சம் வரை செலவாகிறது. எங்கள் மலர் மருத்துவமனையில் ரூ. 2 இலட்சம் ரூபாய் செலவிலேயே பைபாஸ் சர்ஜரி செய்து விடுகிறோம். இது இந்தியாவின் மருத்துவ வளர்ச்சியில் ஒரு அட்வான்டேஜ் தானே...!

குரல் : உங்கள் மருத்துவமனைக்கு சவாலாக இருந்த கேஸ் ஏதேனும் இருந்ததா...?

அவர் : சவால் என்று சொல்லமுடியாது... சென்ற ஆண்டு சென்னை ஸ்டெல்லாமேரீஸ் கல்லூரி மாணவி ஒருவரை யாரோ ஒரு கும்பல் பலாத்காரம் செய்ய முயன்று தோற்றுப்போய் அவளின் கழுத்தை ஒரு கிளாஸினால் அறுத்து துண்டாக்கிவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். சென்னையையே உலுக்கிய ஒரு பரபரப்பான சம்பவம் அது. எல்லா நாளிதழ்களிலும் வெளியான ஒரு நிகழ்ச்சி அது... கழுத்துத் துண்டானநிலையில் அந்த மாணவியை இங்கே கொண்டு வந்தார்கள். மாணவ-மாணவிகள் எல்லாம் திரண்டு வந்து விட்டனர். கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். ஒரே கூட்டம்... தமிழக முதல்வர் கலைஞர் என்னுடன் போனில் தொடர்புகொண்டு எப்படியாவது அந்த மாணவியைக் காப்பாற்றவேண்டும் என்று சொன்னார். அந்த கேஸை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு உடனே ஆபரேஷனுக்கு எல்லா கன்சல்டண்டுகளுடன் இ.என்.டி. பிளாஸ்டிக் சர்ஜரி நர்ஸ் என்று ஒரு பெரிய மருத்துவ குழுவினர் சுமார் பதினான்கு மணிநேரம் போராடி வெற்றி பெற்றோம்.

மதுரையில்
மாபெரும் பாத்திரக் கடை

அன்புடன் அழைக்கும்



ஆனந்தா T. அமிர்தம்

தரமான
செட்டிநாடு
சீர் பாத்திரங்கள்
விற்பனை
செய்வதில் தனிச்
சிறப்பு.

- எவர்சில்வர்
- அலுமினியப் பாத்திரங்கள்
- பிரஷர் குக்கர்கள்
- பிளாஸ்டிக் சாமான்கள்
- மிக்ஸிகள்
- கிரைண்டர்கள்
- பிளாஸ்குகள்
- ஹாட்பேக் & மெல்மோவேர்
- கேஸ் ஸ்டவ்கள்
- திரி ஸ்டவ்கள்
- அயர்ன் பாக்ஸ்கள்
- Electric Rice Cookers
- Non-Stick குக்வேர்கள்
- காபி மேக்கர்கள்
- சோடா மேக்கர்கள்
- எலக்ட்ரிக் கேக் ஓவன்கள்
- வாட்டர் பில்டர்கள்
- பரிசுப் பொருட்கள்

தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து
மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

போன்: 620891 & 620576

ஆனந்தா மெட்டல் கம்பெனி பர்ம்

எவர்சில்வர், அலுமினியப் பாத்திர வியாபாரம்

43-A & 57, காமராஜர் சாலை, கீழ்வாசல், மதுரை-9.

அந்த மாணவியின் உயிரைக் காப்பாற்றி விட்டோம். ஆனால் வாய் பேசமுடியாத நிலையிலிருந்தார். மீண்டும் இன்னொரு ஆபரேஷன் செய்து பேசும் பயிற்சி கொடுத்து இன்று அந்த மாணவி நலமுடன் இருக்கிறார். சிறப்பாகப் பேசுகிறார். அடிக்கடி மருத்துவமனைக்கு வந்து என்னைப்பார்த்து வாழ்த்து சொல்லிவிட்டுத்தான் போவார். அந்தக் கல்லூரியில்தான் என் மகளும் படிக்கிறாள். அங்கு நடைபெற்ற கல்லூரி ஆண்டு விழாவில் அந்த மாணவியின் உயிரைக் காப்பாற்றியதற்காக மலர் மருத்துவமனை மற்றும் டாக்டர் குழுவிற்கு பாராட்டு தெரிவித்ததும், அங்கு என் சார்பில் என் மகளுக்கு பாராட்டுவிழா நடந்ததும். அதை என் மகள் என்னிடம் சொன்னபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

குரல் : நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி...?

அவர் : விருதுகள் நிறையப் பெற்றிருக்கிறேன்.

Excellence Award by Hon'ble Shri Hiteswar Saika, C.M. of Assam on 1992 at New Delhi.

Gem of India Award by Dr. Balram Jakhar, Union Minister of Agriculture on 1994 at New Delhi.

Award for Excellence (1994-95) by Shri. Madhav Rao Scindia, Union Minister for HRD on 1995 at Madras.

For the sake of Honour Award by The Rotary Club of Mylapore, Chennai on 1996.

Best Performance Award by Indian Medical Association, CMC, Vellore Branch on 1999.

குரல் : ஏழ்மை நிலையிருப்போர் உங்கள் மருத்துவமனைக்கு வருகிறார்களா...?

அவர் : ஒரு சீரியஸான நிலையில் பேஸண்ட் வரும்போது ஏழை, பணக்காரன் என்று நாங்கள் பார்ப்பதில்லை. அட்மிட் செய்து கொண்டு உயிர் பிழைக்க வேண்டிய பணிகளைத்தான் முதலில் செய்கிறோம். அதன்பிறகு அவர்கள் விரும்பினால் சிகிச்சையைத் தொடர்வோம். இல்லையெனில் ஜி.எச்-க்கு அவர்கள் விருப்பப்படியே கொண்டு சேர்த்து விடுவோம்.

ஏழ்மைநிலை என்று சொல்பவர்கள் மெடிசனுக்கு மட்டும் பணம் செலுத்திவிட்டு ரூம்ரெண்ட், சர்ஜரியில் ஓரளவு குறைக்கலாம். ஆனால் மருந்துக்கே பணம் இல்லையென்றால் நாங்கள் என்ன செய்யமுடியும்? டாக்டர் பீஸைக் குறைக்கச் சொல்லலாம். ஆனால் மருந்துகளை வெளிநாட்டிலிருந்து எலலாம் வாங்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பணம் தரமுடியவில்லை எனும்போது தர்ம சங்கடமான நிலைதான்.

ஆனால் ரோட்டரி, லயன்ஸ் போன்ற அமைப்புகள் மூலமாக வரும் பேஸண்டுகளுக்கு இதய அறுவை சிகிச்சை, பெட் சார்ஜ் இவற்றில் எல்லாம் ஐம்பது சதவீத கட்டணம் தான் வாங்குகிறோம்.

குரல் : மருத்துவம் சேவை என்பது மாறி வணிகப்பணியாக வருகிறதே...?

அவர் : வணிகப்பணியானது என்று சொல்ல முடியாது. உண்மையான சேவை உயர்வு பெறும்போது நிறைய முதலீடு செய்ய வேண்டியது அவசியம் அல்லவா...? நவீன

மருத்துவத்தின் வளர்ச்சிக்கேற்ப புதுப்புது இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வாங்குகிறோம். அதற்கு சில லட்சங்களிலிருந்து கோடிக்களைத் தாண்டி விடுகிறது. இந்த முதலீட்டை ஒரு தனிமனிதரால் நிறுவ முடியாது. அதற்காகத்தான் கார்ப்பரேட் ஆஸ்பிட்டலாகவும். பங்குகளை வெளியிட்டும் நிறுவ வேண்டியிருக்கிறது. பங்குகளை வாங்குபவர்களுக்கு ஏதாவது டிவிடெண்ட் கொடுத்தால்தானே ஷேர்-ஹோல்டர்களின் நம்பிக்கையைப் பெறமுடியும்.

இலவச சேவை செய்யவேண்டும் என்றால் அரசு எங்களுக்கு உதவி செய்ய வேண்டும். எப்படி என்றால் ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் இலவசமாகவோ. சலுகை விலையிலேயோ தரவேண்டும் உயிர்காக்கும் பிராணவாயு (ஆக்ஸிஜன்) இலவசமாகவோ. சலுகை விலையிலோ தரவேண்டும். ஆனால் குடிதண்ணீர்கூட விலை கொடுத்து வாங்கவேண்டியநிலையில் இலவச சேவையை எங்களால் முழுமையாக வழங்கமுடியாது...

குரல் : உங்களை அரசு மருத்துவமனைகளை நிர்வகிக்கும் தலைமைச் செயலாளராக நியமித்தால்... அரசு மருத்துவமனைகளை சீர்திருத்தம் செய்து விடுவீர்களா...?

அவர் : கற்பனையான கேள்விதான்... இருந்தாலும் சொல்லுகிறேன். மலர் மருத்துவமனையில் என்ன கான்செப்ட்டை கொண்டு வந்தேனோ... அதையேதான் அரசு மருத்துவமனைகளிலும் கடைப்பிடிக்கவேண்டும் என்று விரும்புவேன்... ஆனால் அங்குள்ள பழக்கங்கள், நிரந்தரமான நிலையில் இருப்பவைகளை மாற்றுவது கடினம்தான். என்னுடைய கான்செப்டை கொண்டு வருவதற்கே ஐந்து அல்லது ஆறு வருடமாவது ஆகும். அதற்குள் என்னுடைய பணிக்காலம் முடிவடைந்து விடும். அரசியல்வாதிகள், நான் பொதுவாகச் சொல்லுகிறேன்... அடுத்து வரும் அரசு அந்த கான்ஸெப்டை தொடர்ந்து நிறைவேற்றுமா...? என்பதை நாம் சொல்லமுடியாது. ஆனால் சீர்திருத்தம் செய்யவேண்டும் அதற்கு அந்த கான்ஸப்ட் ஏற்றதாகயிருக்கிறது என்று வரும் ஆட்சியாளர்களும் அமல் செய்யவேண்டும். அப்படி செய்தால் ஓரளவு சீர் செய்ய முடியும். ஆனால் வாக்காளர்களிடம் இப்பொழுது விழிப்புணர்வு அதிகமாகிக்கொண்டே வருவது ஒரு நல்லமாற்றம். அப்படியிருக்கும்போது மருத்துவமனையில் சீர்செய்வது என்பது வருங்காலத்தில் நிச்சயமாக நிறைவேறும்...

குரல் : தாங்கள் எங்களுக்கு பேட்டியை தந்தமைக்கு நன்றி... நகரத்தார்குரல் ஆசிரியர் மீனாட்சிமைந்தர் வி.என். சிதம்பரம் சார்பாகவும், வாசகர்களின் சார்பாகவும் நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவர் : பேட்டி தரும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த அப்பா வி.என்.சிடிக்கு அவர்களுக்கும், வாசகப் பெருமக்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்....


இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...

விக்கிரம வருடம்

வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், எங்களுக்கு நல்ஆதரவை நல்கி வரும் பெரியோர்களுக்கும் எங்களது இதயங்கனிந்த இனிமையான தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் மற்றும் நகரத்தார்குரல் அலுவலர்கள்

வெள்ளி விழா...



சிங்கம்புணரி பாரிவள்ளல் மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளியின் வெள்ளிவிழா ஆண்டுத் திருநாள் மீனாட்சிமைந்தர் வி.என். சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருகில் பள்ளியின் தலைவரும், பாரிவள்ளல் கல்வி அறக்கட்டளையின் நிர்வாகி, அறங்காவலர், முன்னாள் அமைச்சர் செ மாதவன் அவர்களும் உடன் உள்ளார்.

ஆண்டு விழா...




மதுரை மேலப்பொன்னகரத்தில் உள்ள 'அவர்லேடி மெட்ரிக்குலேஷன் பள்ளி'யின் 11வது ஆண்டுவிழா நமது ஆசிரியர் மீனாட்சிமைந்தர் வி.என். சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பள்ளி நிர்வாகி எஸ். சொக்கலிங்கம் நினைவுப் பரிசு வழங்குகிறார். அருகில் மதுரை ராஜாஜி மருத்துவமனை முதல்வர் ஜே.ஆர். விஜயலட்சுமி, எஸ்.எஸ்.காலனி காவல் நிலைய ஆய்வாளர் ஆ. மணிவண்ணன் ஆகியோர் உள்ளனர்.

நூல் மதிப்புரை

நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு

எழுதியவர்: அ. சேஷாத்ரி சர்மா வெளியீடு: வானதி பதிப்பகம்
விலை ரூ. 60-00



நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு என்ற இந்நூலை எழுதியவர் வரகூர் அ. சேஷாத்ரி சர்மா. இவர் 'செட்டிநாடு' எனும் பத்திகையில் ஆசிரியராகப் பன்னெடுங்காலம் பணியாற்றியவர். ஆதலினால் நகரத்தார் பெருமக்கள் பெரும்பாலோரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்று ஓர் இலக்கியவாதியாகத் திகழ்ந்தவர்.

நகரத்தாரின் வரலாற்றை எழுதி இருக்கிறார் என்பதைவிட படைத்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும்.

ஒரு சமூகத்தின் வரலாற்றைத் தொகுத்து எழுதுவதென்பது ஆழ்கடலில் மூழ்கி முத்துக்குளிப்பதற்கு நிகரான ஒரு தேடல் பணி. முத்துக் குளிக்கும்போது கிளிஞ்சல்களைக் களைந்து எப்படி முத்துக்களைத் தேர்ந்தெடுக்கிறார்களோ அதைப்போன்று பிற இலக்கியங்களிலிருந்தும் நகரத்தார் பற்றிய செய்திகளை உள்வாங்கி உருவாக்கியிருக்கிறார்.

எத்தனையோ சமூக வரலாறுகள் மூலமின்றி அனுமான முகங்களோடுதான் பிரதிபலிக்கின்றன. ஆனால் நகரத்தார் வரலாறு பற்றிய இந்நூலில் மூலங்களின் முகங்களையே சரித்திரப் பதிப்பாக வடித்து எடுத்திருக்கிறார்.

கலியுகம் பிறப்பதற்கு முன்பே தனவணிகர் எனப்படுவோர் நாகநாட்டில் வாழ்ந்த சரித்திரத்தையும், 56 தேசங்களில் 'நாகநாடு' என்பது எது என்பதையும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலிருந்தும் ஆய்வு செய்து சரித்திர ஆதாரங்களோடு எழுதி இருக்கிறார்.

பண்டைய மரபுகளோடு வாழும் ஒரு பண்பட்ட கலாச்சாரச் சமூகம் நகரத்தார் சமூகம் என்பதை இந்த நூலின் மூலம் நிருபணமாக்கியிருக்கிறார்

ஈகை, ஈட்டல், காத்தல், வகுத்தல் போன்ற குணங்கள் நகரத்தாரின் பாரம்பரியமான சுவடுகள் தான் என்பதையும் அறியமுடிகிறது.

கவியரசரின் 'இன்று விழித்து விட்டோம்' என்ற பாடலோடு வரலாற்றைத் தொடங்கியிருப்பது இன்றைய குன்றில் நின்று நேற்றைய நிகழ்வுகளைப் பார்ப்பதைப் போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது.

நகரத்தாரின் பண்பாட்டுப் பெட்டகங்களான தாலாட்டுப் பாடல்கள், செப்புமொழிகள், தமிழுக்கும், சமயநெறிக்கும் ஆற்றிய பணிகள் என நூலோர் தொடுத்த வற்றிலெல்லாம் முதலாவதாகத் திகழ்கிறது.

நகரத்தார்கள் திரைகடல் தாண்டி திரவியம் தேடச் சென்றதால் அந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி எவ்வாறு மேம்பாடு கொண்டன என்பதையும் ஒரு பொருளாதார நிபுணராக அலசியிருக்கிறார் அ.சே. சர்மா.

நகரத்தார்கள் வரலாற்றை ஆய்வு செய்கின்ற கல்வியாளர்களுக்கு இந்நூல் ஒரு மூலம்.

நகரத்தார் வரலாறு பற்றி இன்றைய இளைய சந்ததியினர் அறிந்து கொள்ளும் அறிவுக்களஞ்சியம் போன்ற ஒரு வரலாற்றுப் பெட்டகம்.

நகரத்தார் சரித்திர ஐயப்பாடு எழுப்புவோருக்கு இது ஓர் அகராதி...

தரமான இலக்கியத்தைத் தேடிப் பிடித்து வெளியிடும் வானதியிலிருந்து மேலும் ஒரு வரலாற்றுப்படைப்பு இந்த 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' எனும் நூல்.

- நாகேஸ்வரன்

வெற்றியின் இரகசியம்!

- - - - - தென்கச்சி கோ. சுவாமிநாதன் - - - - -

தற்பெருமை...

மனிதனுக்கு உடம்பும் வலுவாக இருக்கவேண்டும். அறிவும் வலுவாக இருக்கவேண்டும். அன்றாடம் நாம் ஏகப்பட்ட மனிதர்களைச் சந்திக்கிறோம். அவர்களில் சிலபேருக்கு உடம்பு உறுதியாக இருக்கும். சிலபேருக்கும் மனம் உறுதியாக இருக்கும். வெகுசிலருக்கே அறிவு பலம் அதிகமாக இருக்கும். அதேநேரத்தில் அவர்களுக்கு இன்னொரு பலகீனமும் இருக்கும்.

அதாவது தற்பெருமை...

தான் ரொம்ப பலசாலி என்கிற நினைப்பு அவர்களிடம் இருந்து கொண்டே இருக்கும். பலம் இருந்தும் பல சந்தர்ப்பங்களில் அவர்கள் தோற்றுப் போவதற்குக் காரணம் இந்தப் பலகீனம்தான்.

சீனா தேசத்தில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் பெயர் எஃப்பெண்டி பெரிய அறிஞர்.

ஒருநாள் அவரைத் தேடிக்கொண்டு ஒருவன் வந்தான். வந்தவன் உடலால் பலசாலி. அவன் இவரைப் பார்த்துச் சொன்னான்.

"ஐயா! நான் ரொம்பவும் பலசாலி! அதாவது நான் உடம்பாலே பலசாலி! நீங்க அறிவாலே பலசாலி! நாமரெண்டு பேரும் சேர்ந்து இருந்தா நல்லதாச்சே! நாம் நண்பர்களாக இருக்கலாமே!" என்றான்.

அந்தப்பெரியவர் இவனைக் கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தார்.

அப்புறம் கேட்டார்.

"சரிப்பா... நீ எந்த வகையிலே பலசாலி?"

உடனே அவன் தன்னைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

"நான் பெரிய பாறாங்கல்லை அப்படியே அலாக்காகத் தூக்கி என்னாலே எறியமுடியும்! நம்ம ஊர் எல்லைக்கு வெளியே நின்று கல்லைத் தூக்கி எறிஞ்சேன்னா அது நம்ம நகரத்துச் சுவரைத் தாண்டிக்கொண்டு போய் உள்ளே விழும்!"

பெரியவர் யோசித்தார்.

"சரி வா... ஒரு சோதனை செய்து பார்ப்போம்."

அவனை அழைத்துக்கொண்டு அந்த நகரத்தின் நடுப்பகுதியிலேயிருந்த திடலுக்குப் போனார். தன்னுடைய சட்டைப்பையிலே இருந்த ஒரு பட்டுக் கைக்குட்டையை எடுத்தார். அவனிடம் கொடுத்தார். அப்புறம் சொன்னார்.

"இந்தப்பா... நீ ரொம்ப பலசாலிங்கிறீயே... இந்த சின்னத்துணியை சுவருக்கு அப்பாலே போய் விழுறமாதிரி உன்னாலே வீசி எறிய முடியுமா...?"

"என்னங்க இது? ஒரு பெரிய பாறாங்கல்லையே தூக்கி எறியவன் நான்... இந்த சின்னத்துணியையா என்னாலே தூக்கி எறியமுடியாது? கொடுங்க இப்படி..." அவன் அவரிடமிருந்த அந்தத்துணியை வாங்கினான். தன் பலம் கொண்ட மட்டும் வேகமாக அதை வீசி எறிந்தான்.

கனம் இல்லாத அந்தக் கைக்குட்டை சுவரைத் தாண்டிப் போகவில்லை.

கொஞ்சதூரம் மேலே போய் திரும்பவும் வந்து தரையிலேயே விழுந்தது.

பெரியவர் சிரித்தார்.

"என்ன நண்பா... முடியலையா?" என்றார்.

அவன் மௌனமாக நின்று கொண்டிருந்தான்.

"என்னாலே அது முடியும்!" என்றார் பெரியவர்.

"எப்படி?" என்பது போல அவன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

பெரியவர் அந்தக் கைக்குட்டையை எடுத்தார். ஒரு சின்னக்கல்லை அந்தத் துணிக்குள்ளே வைத்தார். கல் தெரியாத அளவுக்கு துணியால் மூடி சுருட்டிப் பிடித்தார். இப்போது அந்தக்கல்லோடு சேர்தது அந்தக் கைக்குட்டையை வேகமாக வீசி எறிந்தார். துணி கல்லோடு சேர்ந்து வேகமாகப் போய் சுவருக்கு அப்பால் விழுந்தது.

இளைஞன் யோசித்தான். அவனுக்குப் புரிந்தது.

உடல்பலத்தை விட அறிவுபலம் பெரியதுதான் என்பதை அவன் உணர்ந்தான்.

உடனே அவன் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டான்.

உடல்பலமும் அறிவுபலமும் சேர்ந்து இருக்கும்போது அது ஆபத்தாகக்கூட போய்விடுவதுண்டு.

சிங்கத்துக்கு உடல்பலம் அதிகம். அதற்கு அறிவுபலமும் அதிகமாக இருந்துவிட்டால் என்ன ஆகும் தெரியுமா?

இந்தக் கதையைக் கேளுங்கள்...

ஓர் ஆள் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தான்.

திடீர் என்று ஒரு சிங்கம் எதிரே வந்தது.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

உடனே அந்த இடத்திலேயே உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டு கடவுளை வேண்ட ஆரம்பித்து விட்டான்.

இதைப் பார்த்துவிட்டு அந்தச் சிங்கமும் அவனுக்குப் பக்கத்திலேய வந்து உட்கார்ந்தது. கண்ணை மூடிக் கொண்டிருந்தது.

அந்த ஆள் இதைப் பார்த்தான். சிங்கத்திடம் சொன்னான்.

"அருமைச் சகோதரனே...! உன்னைப் பார்த்ததும் எங்கே என் உயிர் போயிடுமோன்னு பயந்தேன். நல்லவேளை. நீயும் என்னோட சேர்ந்து கடவுளை நினைக்க ஆரம்பிச்சுட்டே! இப்படி உன்னைப் பார்க்கறதுக்கு எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குத் தெரியுமா...?"

உடனே அந்தச்சிங்கம் இவன் பக்கம் திரும்பிச் சொன்னது.

"பேசாம இரு... சத்தம் போடாதே.. உன்னை எனக்கு இரையாக சாப்பிடக் கொடுத்த அந்த இறைவனுக்கு இப்ப நான் கண்ணை மூடி நன்றி சொல்லிக்- கிட்டிருக்கேன்"

- சொல்வேன்

தில்லைக்கூத்தனை கேளுங்கள்

தில்லைக்கூத்தன் பதில்கள்

(க. ராமநாதன், காரைக்குடி) ★

இந்தியாவிற்கு கிளிண்டன் வருகை பற்றி...?

ஒரு மிகப்பெரிய ஜனநாயக நாட்டிற்கு ஒரு மிகப்பெரிய ஜனநாயக நாட்டைச் சேர்ந்தவரும், ஒரு வல்லரசு நாட்டின் அதிபருமான பில் கிளிண்டன் வருகை வரவேற்கக் கூடியதே. ஓர் இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கு முன்பாக அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் இந்தியாவிற்குவந்தார். அதன்பிறகு இப்போதுதான் அமெரிக்க அதிபர் ஒருவர் வருகை தந்திருக்கிறார். பொக்ரான் அணுகுண்டை வெடித்து உலகத்தின் கவனத்தை நாம் ஈர்த்தபோது கிளிண்டன் நம் நாட்டின் மீது பொருளாதார தடையை விதித்தார். இந்தியாவும் அந்தத்தடையைப் பொருட்படுத்தவில்லை. இந்தியா ஒரு தன்னிறைவு பெற்ற தேசம். இந்தத் தடை ஒன்றும் நமக்குப் பெரிதல்ல என்று பிரதமர் வாஜ்பாய் அன்றே பதில் அளித்தார். ஆனால் அதன்பிறகு அமெரிக்காதான் மெல்ல மெல்ல இந்தியாவின் பக்கம் தன் பார்வையைத் திருப்பத் தொடங்கியது. அதற்குக்காரணம் அமெரிக்காவில் வாழுகின்ற பதினெந்து லட்சம் இந்தியர்கள்தான் காரணம் என்று நினைக்கிறேன். அங்கு வாழும் நமது இந்தியர்கள் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியிலும், விஞ்ஞான வளர்ச்சியிலும், மருத்துவத்துறையிலும், தகவல் தொடர்புத்துறையிலும், கம்ப்யூட்டர் துறைகளிலும் முன்னணியில் இருந்து வருகின்றனர். அவர்கள் அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தியாவின் நல்லெண்ணத்தையும், வளர்ந்து வரும் நாடுகளின் வரிசையில் இந்தியா 10ஆம் இடத்தில் இருக்கிறதென்பதையும் உணர்த்தினார்கள். நமது வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங், பிரதமர் வாஜ்பாய் போன்றவர்களின் ஆக்கப்பூர்வமான தெளிவான வெளியுறவுக் கொள்கையாலும் அந்நாட்டு அரசாங்கத்தினருக்கு இந்தியாவின் மீது ஒரு பாசம் ஏற்பட்டது.

அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவேண்டும் என்று இருநாட்டின் வெளியுறவுத்துறை அதிகாரிகளின் மட்டத்தில் மட்டும் வாதிட்டு வந்த அமெரிக்க அதிபர் இன்று மக்கள் மன்றத்தில் (நாடாளுமன்றத்தில்) கோரிக்கை வைத்திருக்கிறார் என்றால் இந்தியாவின் பலத்தை கிளிண்டன் உணர்ந்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். என்ன... ஒன்று... வங்க தேசம் சென்று வந்தது சரி... பாகிஸ்தான் செல்வதைத்தான் ஏற்க முடியவில்லை... அவர் அந்நாட்டுக்கு வேறொரு நாளில்கூட தனிச்சுற்றுப்பயணம் வகுத்து சென்றிருக்கலாம்.

கிளிண்டனின் இந்திய வருகையில் அதிகம் குழம்பிப் போயிருப்பவர்கள் பாகிஸ்தானும், சீனாவும்தான்...

நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய கிளிண்டன் இந்தியாவிற்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக உறுதியளித்திருக்கிறார். இதனால் இந்திய அமெரிக்க பொருளாதார வர்த்தகம், ஏற்றுமதி இறக்குமதி, தகவல் தொடர்பு போன்ற துறைகளில் அமெரிக்க முதலீடு அதிகம் இந்தியாவிற்கு கிடைக்கும் வாய்ப்பும் அதிகம். உலகத்தின் தலைசிறந்த சந்தையாக இந்தியா திகழ்கிறது என்பதும் அமெரிக்கர்களின் ஒட்டுமொத்தமான எண்ணமும் கிளிண்டன் வருகைக்கு காரணமாக இருக்கலாம். ஒரு வளர்ந்த நாடு வளருகின்ற நாட்டோடு நட்புறவு கொள்வது இருநாட்டுக்கும் நல்லதுதான்... ★

சங்கத்துச் செய்திகள்

திருச்சி

திருச்சிராப்பள்ளி கருணாநிதிநகர் ஸ்ரீ கற்பகவிநாயகர் நகரத்தார் சங்கத்தின் சார்பில் தமிழ்ப்புத்தாண்டு நாளில் சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதப் பெருமானை வழிபடுவதற்காக பாதயாத்திரை சென்றனர். திருச்சி கே.கே.நகர் நவசக்தி விநாயகர் ஆலயத்திலிருந்து 10-4-2000 அன்று காலை யாத்திரை புறப்பட்டது. யாத்திரையில் கலந்து கொள்ள இறையன்பர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ராம. சபாரத்தினம் செட்டியார், மா. ஸ்ரீநிவாசன் செட்டியார், அரு. பெரியண்ணன் செட்டியார் ஆகியோர் பாதயாத்திரை கமிட்டியில் உள்ளனர். இத்தகவலை சங்கத்தலைவர் பெரி.சி. சுப்பையா செட்டியார் தெரிவித்துள்ளார். துணைத்தலைவர் மெ. மெய்யப்பசெட்டியார், செயலாளர் நா. சிதம்பரம் செட்டியார், துணைச்செயலாளர் மா. செல்லப்பசெட்டியார், பொருளாளர் வீர. நாராயணன் செட்டியார் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர்.

ஈரோடு

நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் சார்பில் கூட்டு இறைவழிபாடு மற்றும் சிறப்புப் பட்டிமன்றமும் 27-2-2000 அன்று நடைபெற்றது. "வாழ்க்கை வளம் பெறப் பெரிதும் துணைபுரிவது கல்வியா...? செல்வமா...?" எனும் தலைப்பில் குழந்தைகள் பங்கேற்றுப் பட்டிமண்டபத்தில் பேசினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தலைவர் மா.பழ. மாயாண்டி செட்டியார், ஏஎன் செல்வநாதன் செயலாளர், என்.எஸ்.எஸ். சிவசுப்பிரமணியன் செட்டியார் துணைத்தலைவர், எல். வள்ளியப்பன், எஸ். பழனியப்பன் துணைச்செயலாளர், எம்.காளத்திநாதன் பொருளாளர் ஆகியோர் ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தனர்.

தேவகோட்டை

நகரத்தார் இளைஞர் முன்னேற்ற சங்கத்தின் ஆண்டு பொதுக்குழுக்கூட்டம் நகரச்சிவன் கோயிலில் 5-3-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அழகு. சோமசுந்தரம்-தலைவர், ஒய். கார்த்திகேயன், எம். சண்முகம் - துணைத்தலைவர்களாகவும், செயலாளர் எல்.பி.வி. பழனியப்பன், இணைச்செயலாளர் பெரி. ஆனந்த், பொருளாளர் என். சிதம்பரம் ஆகியோர் புதிய நிர்வாகிகளாகப் பொறுப்பேற்றனர்.

பவானி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பில் மாசிமக விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பவானி, கொமாரபாளையம், ஆப்பக்கூடல், காளிங்கராயன்பாளையம் பகுதி நகரத்தார்கள் பெருமளவில் பங்கேற்றனர். சங்கத்தலைவர் ஆர்எம். நாராயணன் செட்டியார். பழனியாண்டவர் ஆலயத்தில் இருந்து அருள்பாலிக்கும் புனிதவேலை எடுத்து வலம் வந்தார். பின்னர் ஸ்ரீ சௌடேஸ்வரி அம்மன் திருமண மண்டபத்தில் ஆராதனை நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை ஆர்எம். நாராயணன் செட்டியார், பிஎல். முத்தையா செட்டியார், ஏஆர். அண்ணாமலை, ஏஎன்.சி. தியாகராஜன் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் மிகச்சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

முதலாம் ஆண்டு அஞ்சலி



தோற்றம்:
19–9–1930

நிறைவு:
15–4–1999

மு.அ. மீனாட்சி ஆச்சி - வலையபட்டி

கதிரில் மதியில் கலந்து, காவிரி
நதியில் இணைந்து, நலம் தரு காற்றிலும்
மண்ணிலும் மறைந்த மாதா மீனாள்
விண்ணில் வாழும் தெய்வமன்றோ
தினமும் அவளை துதிப்போம் நாமே
மனமும் செயலும் மொழியும் அவளே.

கணவர்: N.M. அண்ணாமலை செட்டியார்

மக்கள்: கலைஅரசன் – இந்திரா
பாண்டியன் – உமா
பாப்பா – பழனியப்பன்
முருகன் – தேவசேனா

மற்றும் அருமை பேரக்குழந்தைகள், அலுவலர்கள்
பாண்டியன் பேப்பர் கம்பெனி
சென்னை, சேலம், சிவகாசி, மதுரை

மீனா அண்ணாமலை கார்டன்ஸ், 97, வி.எம். தெரு,
டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை – 4

தாம்பரம்

நகரத்தார் சங்கத்தின் சார்பில் முதலாண்டு நிறைவுவிழா நடைபெற்றது. விழாவிற்கு அம்பத்தூர் நகரத்தார் சங்கத்தலைவர் சபாரத்தினம் தலைமையேற்றார். கும. வள்ளியப்பன், கவிஞர் ஆத்தங்குடி சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். நகரத்தார் பெருமக்கள் பெரும்பாலோர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை தாம்பரம் நகரத்தார் சங்கத்தலைவர் சித.கதி. சிதம்பரம் தலைமையில் நிர்வாகிகள் ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

மதுரை நகரத்தார் சங்கத்தின் முதல் செயற்குழுக் கூட்டம் 26-3-2000 அன்று வடக்குச் சித்திரை வீதி நகரவிடுதியில் நடைபெற்றது. கூட்டத்தில் சங்கத்தின் பின்புறமுள்ள இடத்தில் புதிய கட்டிடம் கட்டவேண்டும் என்பது குறித்தும், மகமை சம்பந்தமான விஷயங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.



குடமுழுக்கு விழா...

சேலம் அருள்மிகு ராஜமாதங்கி திருக்கோயில் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் 9-4-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. சக்தி உபாசகர் தி. ஷா சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், வேள்வி சக்ரவர்த்தி கே.எஸ். ராஜப்பா சிவாச்சாரியார் ஆகியோரின் முன்னிலையில் கும்பாபிஷேகம் யாகசாலை சர்வ சாதகமும் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ ராஜமாதங்கி ஆஸ்ரமத்தின சார்பிலும், மாதங்கிதாசன் தலைமையில் சிறப்பான ஏற்பாடுகள் செய் யப்பட்டிருந்தன.

திருமதி ந. கோதை ஆச்சி வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்



திருமதி ந. கோதை ஆச்சி அவர்கள் தனது பெற்றோருக்கு ஒரே பெண். இவரது பெற்றோர், இராயவரத்தில் பிறந்த திரு அ.நா. அண்ணாமலை செட்டியார் அவர்களைச் சிறுவயதிலேயே தத்து (சுவீகாரம்) எடுத்துக் கொண்டனர். இதனால் உடன் பிறவாவிடினும், அன்புச்சகோதரர் ஒருவரைப் பெற்றார் திருமதி ந. கோதை ஆச்சி அவர்கள்.

திருமதி ந. கோதை ஆச்சி அவர்கள் நேமத்தான்பட்டியிலுள்ள தனது தாய்வழிப்பாட்டனார் (உண்ணாமலை ஆச்சி அவர்களின் தகப்பனார்) டொம் வீடு அருணாசலம் செட்டியார் வீட்டில் வளர்ந்தார்கள். பாட்டனார் திரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் தன் பேத்திக்குச் சிறப்பாகத் திருமணம் செய்ததுடன், சில்லரைச் செலவிற்கு மட்டும் 1000 பவுன்காசுகள் கொடுத்தார்கள்.

கொத்தமங்கலம் உயர்திரு. சி.ராம.சி. லெக்ஷ்மணன் செட்டியார், திருமதி மீனாக்ஷி ஆச்சி (காரைக்கடி மேலக்கொரட்டியார் வீட்டில் பிறந்தவர்கள்) ஆகியோரின் மகன் திரு. லெ. நடேசன் செட்டியார் அவர்களுக்கும், கோதை ஆச்சி அவர்களுக்கும் 14-9-1929 ஆம் நாளில் கடியாபட்டியில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. அன்றைய வழக்கப்படி உற்றார் உறவினர் சூழ ஐந்து நாட்கள் மணவிழா பெருவிழாவாக நடந்தேறியது.

இந்தியப் பெருநாடு அடிமைப்பட்டுக் கிடந்த அந்நாளில், அண்ணல் காந்தி அடிகளின் அறப்போரில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் திரு. நடேசன் செட்டியார் கோதை ஆச்சி தம்பதியர். சைவ சமயத்தில் முழுகித்திளைத்தவர் திருமதி ந. கோதை ஆச்சி அவர்கள்.

வணிக முயற்சி மேற்கொண்டு கணவர் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை முதலிய நாடுகளுக்குச் சென்றபோது தானும் உடன் சென்றார்கள். திரு. நடேசன் செட்டியார் கோதை ஆச்சி தம்பதியருக்கு ஐந்து குழந்தைகள் (இரண்டு பையன்கள், மூன்று பெண்கள்) உரிய காலத்தில் பிறந்தனர். இத்தம்பதியருக்கு மூன்று பேரன்களும் ஆறு பேத்திகளும் உள்ளனர்.

கணவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் நேரடிப் பங்கு கொண்டு பெரும் பொருட் செலவு செய்தபோதும், சிறை சென்றபோதும் அயராது துணை நின்றார் கோதை ஆச்சி. பெரும்பாலான நகரத்தார்கள் அன்றைய பிரிட்டானிய அரசுக்கு ஆதரவான (ஜஸ்டிஸ் பார்ட்டி) நீதிக்கட்சியில் இருந்து கொண்டு காங்கிரசில் சேருவதைக் கேவலமாக நினைத்தபோது மும்முரமாகக் கதர் உடுத்திக் காங்கிரசுக்காகப் பாடுபட்டார்கள். கணவரின் விருப்பத்திற்காகக் காந்தீய வழியில் புலால் உண்பதை நிறுத்தி, கதர் ஆடை அணிந்து எளிமையான வாழ்வு வாழ்ந்தார்கள்.

மஹாத்மா காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாற்றைப் பல இந்திய மொழிகளிலும்

ஆங்கிலத்திலும் திரைப்படமாக (செய்திப்படமாக) அவர்கள் கணவர் எடுத்தபோது பண உதவி செய்து துணை நின்றார்கள். திரு. நடேசன் செட்டியார் அவர்கள், காந்தியடிகளின் வரலாற்றை முதன்முதலாகத் திரைப்படமாக எடுத்ததுடன், அதை உலகெங்கும் தாமே எடுத்துச்சென்று திரையிட்டச் சாதனையாளர் என்பது இங்கு குறிப்பிடத்தகுந்தது. இதற்கு ஊக்கமளித்து உறுதுணையாக நின்றவர் திருமதி கோதை ஆச்சி அவர்கள் அவரது கணவர் தாமிரப்பத்திரம், பென்ஷன், நிலம் எதுவும் வாங்க மறுத்தபொழுதும், அதற்கும் சம்மதித்து மகிழ்ச்சியோடு வாழ்ந்தவர் கோதை ஆச்சி.

கோதை ஆச்சி அவர்கள் தமிழில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். ரசிகமணி டி.கே.சி. அவர்கள் கொத்தமங்கலம் வந்தபோது அவர்களை இராமாயணம் படிக்கச்சொல்லி நகரவிருந்து அளித்தார்கள். இராமாயணம் படிப்பதிலும் கேட்பதிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள்.

தெய்வ நம்பிக்கை மிகவும் உடையவர்கள் கோதை ஆச்சி. கடந்த நாற்பது ஆண்டுகளாக மயிலை அப்பர் சுவாமி கோயிலுக்குத் தினமும் காலையில் சென்று வழிபட்டு வந்தார்கள். உலகநாயகி அம்மன் பெயரில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள்.

கோதை ஆச்சி அவர்கள் சிக்கனத்தினால் முன்னுக்கு வந்தவர்கள். எதுவுமே தனக்கு என வைத்துக் கொண்டதில்லை. தினமும் காலை சூர்யநமஸ்காரம் செய்வார்கள். எந்தக்காரணத்தினாலும் முதுமையைப் பாராட்டாமல் எல்லா விசேஷங்களிலும் பங்கு கொள்ள ஆர்வமுடையவர்கள்.

தினமும் நீதிக்கதைகள் கூறி, பேரன் பேத்திகளை தூங்க வைப்பார்கள். கார்த்திகை சோம வாரத்தின்போது அன்னதானம் செய்யப் பிரியமுடையவர்கள்.

சிவன் சேவடி சேரவேண்டும் எனத் தீவிர வேட்கை கொண்டு கடைசிக் காலங்களில் தேவாரம் திருவாசகம் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். ஆச்சி அவர்கள் கடந்த 21-1-2000 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.



இந்திய விஞ்ஞானிகளின் இன்னொரு சாதனை...!

இந்தியாவின் செயற்கைக்கோள் 'இன்சாட்-3பி' விண்ணில் ஏவப்பட்டது. இந்திய விஞ்ஞானிகள் தொடர்ந்து விண்வெளிக்கு செயற்கைக்கோள்களை அனுப்பி வருகின்றனர். இன்சாட் வரிசையில் கடந்த 22-3-2000 அன்று இந்த இன்சாட் - 3 பி செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பினர். 2070 கிலோ எடை கொண்ட அந்த செயற்கைக்கோள் முழுக்க முழுக்க இந்திய விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்டது. பிரான்சு நாட்டிலுள்ள பிரான்ஞ்சுகயான என்ற இடத்திலுள்ள ராக்கெட்ட தளத்திலிருந்து ஏரியன் - 5 எனும் ராக்கெட் இன்சாட்-3பியை சுமந்து விண்வெளிக்குச் சென்றது பூமியிலிருந்து சென்ற 35 நிமிடத்தில் ஏரியன் - 5 ராக்கெட்டிலிருந்து இன்சாட்-3பி பிரிந்து தான் சுற்ற வேண்டிய பாதைக்கு சென்றடைந்தது. பூமியைச் சுற்றத் தொடங்கியதும் செயற்கைக்கோள் பெங்களூரில் உள்ள ஹசன் விண்வெளி ஆய்வு மையத்தின் கட்டுப்பாட்டின்படி செயல்படத் துவங்கியது. இன்சாட்-3பி வர்த்தக மேம்பாட்டுக்காகவும், செல்போன் மூலம் தகவல் தொடர்புக்கான பணிகளைச் செய்யும். ரூ. 150 கோடி ரூபாய் செலவில் விண்ணில் செலுத்தப்பட்ட இன்சாட்-3பி வெற்றிகரமாக இயங்கி வருகிறது. இது இந்தியாவின் இன்னொரு சாதனையாகும் என்று இஸ்ரோ தலைவர் கஸ்தூரிரங்கன் கூறியிருக்கிறார்.

12ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி







தோற்றம்:
21–8–1932

மறைவு:
25–12–1987

எஸ். செந்தில்நாதன் செட்டியார்

சிந. சா. இல்லம், தேவகோட்டை

நிதிப் பள்ளியில் நிலையான ஆங்கில
வரலாற்று ஆசானாய்த் திகழ்ந்தீர்
மாணவ மாணவியர் மனம் மகிழ
ஆங்கிலத்தை எளிய நடையில் கற்பித்தீர்
வரலாற்றை குறிப்பின்றிக் கற்பித்தீர்
நகைச்சுவை கலந்த நடையுடையீர்
மூச்சு நிற்கும் உரை உழைத்தீர்
நிறைகுடம் நீர்! வரலாற்றுப் புத்தகம் நீர்!
வானம் சென்றாலும் நும் புகழ் ஓங்குக!

மனைவி	:	எஸ். இந்திராள்
மகன்	:	எஸ். விஸ்வநாதன்
மருமகள்	:	வி. விஜயா
மகள்	:	எம். விசாலாட்சி
மருமகன்	:	மணிகண்டன்
பேரன்–பேத்திகள்	:	ஐஸ்வரியா, செந்தில்நாதன், ஜனனி

8-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி







தோற்றம்:
23–2–1927

மறைவு:
22–04–1992

ஒக்கூர்

மு.சே. ராமநாதன் செட்டியார்

(இந்தியன் நேவியின் ஓய்வு பெற்ற அதிகாரி)

அவர்களின் திருப்பாதங்களுக்கு அஞ்சலி செலுத்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

இராம. ருக்மணி ஆச்சி - மனைவி

மகன்கள்:
இராம. கனகராஜன்
இராம. ஸ்ரீதரன்

மருமகள்கள்:
க. இராஜேஸ்வரி
ஸ்ரீ மீனாள்

மகள்:
இராம. நிர்மலா

மருமகன்:
சே. கண்ணப்பன்

பேரன்கள்:
க. அசோக்குமார் ஸ்ரீராம் சரவணன்
க. ஆனந்த் க. தினேஷ்

பேத்தி: ஸ்ரீராம் ருக்மணி

இராமநாதன் இல்லம், 343 MIG, எண்பது அடி ரோடு,
அண்ணாநகர், மதுரை - 625 020.

நினைவாஞ்சலி



தோற்றம்:
19–12–1930

மறைவு:
5–3–2000

தெ. முருகப்பசெட்டியார்

பூங்குடியார் வீடு, காரைக்குடி

பூங்குடியார் வீட்டுக்குப் பெருமை சேர்த்துப்
புதுப்பொலிவாய் நல்வீடு கட்டிப் பார்த்துத்
தேங்குழலாய் அதிரசமாய்ச் சுவையாய்ப் பேசித்
தெய்வத்தைப் போற்றுவதில் முதன்மை பெற்றுப்
பாங்காகக் "கார்தொழிலில்" புகழில் ஓங்கிப்
பாவலர்கள் பாராட்ட அறங்கள் வளர்த்து
நீங்காதான் தாளடைந்த "முருகப் பாவை"
நெஞ்சத்தில் நிறைந்தவரைப் பணிந்து வாழ்வோம்!

மனைவி
முரு. தேனம்மை

மகன்: முரு. கணேசன்	மகள்: விசாலாட்சி இராமசாமி
மருமகள்: விசாலாட்சி கணேசன்	மருமகன்: மெ. இராமசாமி

மற்றும்
பேரன் – பேத்திகள்

நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:
7–11–1915

மறைவு:
6–4–1996

பெங்களூர் சுப. லெட்சுமணன் செட்டியார்

B.A. Hons., D.Com., C.A.I.I.B.,

நெற்குப்பை

என்றும் தங்கள் நினைவை மறவாத

பெங்களூர் லெ. தெய்வானை ஆச்சி - மனைவி

லெ. சுப்பிரமணியன் - மகன்

சுப. அழகம்மை - மருமகள்

சுப. லெட்சுமணன் (எ) சீனிவாசன், *B.Pharm.,* - பேரன்

(Saravanaa Medicals, Coimbatore - 46.)

திருமதி வள்ளிகண்ணு லெட்சுமணன், *D.E.C.E., (B.Sc., Comp.)* - பேத்தி

சுப. இராமநாதன் (எ) கணேசன், *B.E.,* - பேரன்

4-ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



தோற்றம்:
18-7-1947

மறைவு:
21-04-1996

அமரர். இராம. அருணாசலம்

முன்னாள் நிர்வாக இயக்குநர்	:	ஸ்ரீவிசாலம் சிட்பண்ட் லிமிடெட்
,, இயக்குநர்	:	தி நெல்லை பைனான்ஸ் (பி) லிமிடெட்
,, இயக்குநர்	:	அருணா கெமிக்கல்ஸ் அன் பார்ம்ஸ் லிட்
,, நிர்வாக உரிமையாளர்	:	ஸ்ரீவிசாலம் பண்ணைகள்
,, அறங்காவலர்	:	ஸ்ரீவிசாலம் அறக்கட்டளை
,, அறங்காவலர்	:	ஸ்ரீ அருணா சாரிடபிள் டிரஸ்ட்
,, அறங்காவலர்	:	ஸ்ரீராமசாமி மெய்யம்மை சாரிடபிள் டிரஸ்ட்
,, நிர்வாக அறங்காவலர்	:	ஸ்ரீவேத வேதாந்த ஸ்ரெளத வித்யாசாலா
,, பார்ட்னர்	:	ஸ்ரீவிசாலம் போட்டோஸ்
,, செயலாளர்	:	ஸ்ரீமீனாட்சி சாரிடபிள் டிரஸ்ட்

பார்புகழும் விசாலம் பழுதின்றி தானுயர
சீர்மேவ தினமுழைத்த செம்மலே பெருங்கருணை
அருணாசல இறையேநின் பொற்பாத மலரடிக்கு
பெருகிவரும் கண்ணீர் அஞ்சலி!

என்றும் தங்கள் நினைவை மறவாத
ஏ.ஆர். விஸ்வநாதன், நிர்வாக இயக்குநர்
ஏ.ஆர். மீனாட்சி, இயக்குநர்
குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள்
மற்றும்
ஸ்ரீவிசாலம் சிட்பண்ட் லிமிடெட் அலுவலர்கள்

அகத்தியர் வழிபட்ட அகத்தீஸ்வரர் ஆலயம்...

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்...

வானத்தை எப்படி அளவிடமுடியாதோ அதேபோல மனிதனின் ஆசைகளை அளவிடமுடியாது ஒருவனிடம் ஒருகோடி ரூபாயை கொடுத்து விட்டு. மேலும் ஒரு லட்ச ரூபாயை கொடுத்தாலும் வாங்கிக்கொள்வான். ஒருகோடி கிடைத்ததே என்று திருப்தியடையமாட்டான். ஆனால் **அதே மனிதனுக்கு அன்னதானம் செய்யும்போது ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் தன்னால் உணவருந்தமுடியாது என்று திருப்தியடைந்து, போதும் என்று மறுத்துவிடுவான்.** அன்னதானம் அந்த அளவிற்கு புண்ணியமானது.

சிவபெருமான் பார்வதி திருமணம் கைலாயமலையில் நடைபெற்ற சமயத்தில் அனைத்து தெய்வங்கள், தேவர்கள், ரிஷிபெருமக்கள் இவ்வரிய திருமண வைபவத்தை காண வந்திருந்தபோது வடபகுதி தாழ்ந்தும் தென்பகுதி உயர்ந்தும் காணப்பட்டது. அவ்வமயம் சிவபெருமானின் கட்டளைப்படி உலகை சமன் செய்வதற்கு அகத்தியர் தென்புறம் நோக்கி பயணப்பட்டார். அவ்வாறு வரும் வழியில் **மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கருங்காலக்குடிக்கு அருகிலுள்ள திருச்சுனை** என்ற ஊரில் உள்ள சிறுகுன்றில் இருக்கும் என்றும் வற்றாத சுனையில் நீராடி, லிங்கத்தை ஸ்தாபித்து தன் நித்தியபூஜைகளை நிறைவேற்றிச் சென்றார். இக்குன்றில் உள்ள சிவன் கோயிலில் அகத்தியபெருமானுக்கு தனி சந்நதி உண்டு. அந்த திருக்கோயிலுக்கு அருகில் கடந்த சில மாதங்களாக **"அருட்பெருஞ்ஜோதி அறச்சாலை"** ஒன்று நிறுவப்பெற்று நித்ய அன்னதானம் தினந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த பகுதியில் உள்ள ஏழைக் குழந்தைகளும், வயதான முதியோர்களும் உணவருந்தி மகிழ்கின்றனர். அந்த அறச்சாலைக்கு தங்களால் இயன்ற பணஉதவி / பொருளுதவி தந்து எல்லாம் வல்ல அகத்தீஸ்வரரின் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

செக், டிராப்ட் போன்றவற்றை **"அருட்பெருஞ்ஜோதி அறச்சாலை, திருச்சுனை"** என்ற பெயரில் எடுத்தும், **அருட்பெருஞ்ஜோதி அறச்சாலை, C/o. விநாயகர் மெடிக்கல்ஸ், கருங்காலக்குடி போஸ்ட், மதுரை மாவட்டம்** என்ற முகவரிக்கும் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். பஸ் ரூட்: மதுரை to திருச்சி செல்லும் வழியில் 40 கி.மீ. தூரம்.

DOMESTIC TERM DEPOSITS:

15 days to 29 days	5.50%	1 year and above but less than 2 years	10.00%
30 days to 60 days	6.50%	2 years and above but less than 3 years	10.50%
61 days to 90 days	7.50%	3 years and above	11.00%
91 days to 180 days	8.50%		
181 days to less than one year	9.50%		

LESS THAN 2 YEARS

Single Deposit over 0.5% over the rate
Rs. 15.00 lakhs prescribed above
The revised interest rate structure for NRE & NRNR Term Deposits

PRECLOSURE OF TERM DEPOSITS

Preclosure of Deposit Within 14 days from the date of Deposit	No interest payable
Preclosure between 15th day and 29th day	2% less than the applicable rate
Preclosure after 29 days (ie. 30 days & above)	1% less than the applicable rate

FOR NRI DEPOSITS
NRE TERM DEPOSITS

6 months to less than 1 year	9.50%
1 year and and above but less than 2 years	10.00%
2 years and above but less than 3 years	10.50%
3 years and above	11.00%

NRNR TERM DEPOSITS

6 months and above upto 3 years	11.0%

DEPOSITS UNDER FCNR (BANK) SCHEME

Period	**Rate of Interest (% p.a.)**		
	GBP	**USD**	**DEM / EURO**
1 year to 3 years	5.75	5.75	3.25

ROC M7 331178 / 81 dt. 7-5-82
NAGARATHAR KURAL